ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆகஸ்ட் - 1981
ஆவணி



ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய வழியில் மத உண்மைகளை இந்த மாதப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 12
ஆயுள் சந்தா	ரூ. 150
தனிப் பிரதி	ரூ. 1-20

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 15 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம்.

வருட சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதன் மூலம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவி புரியக் கோருகிறோம். ஆயுள் சந்தா என்பது 35 ஆண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் என்பதை குறிக்கிறது.

வேண்டுகோள்

1. மக்களுக்கு உணவு உடை வழங்கி உடல் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் நல்ல உதவி ஆகிறது. கல்வி, தொழில் முதலியவற்றைக் கற்பித்து ஜீவனோபாயத்திற்கு வழிவகுத்துத் தருவது அதனினும் மேலான சேவை ஆகிறது. ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படித்தும் கேட்டும் ஆத்மசாதனங்களில் ஈடுபடச் செய்வது தலையாய கைங்கரியமாகிறது. தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் ஞானதானம் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது நமக்கும் மற்றவர்களுக்கும் பெருநலன் தரும்.

2. அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கரியமாக கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. அன்பர்கள் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள் தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

தொலைபேசி: 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61	ஆகஸ்டு — 1981	இதழ் 8

பொருளடக்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ௵ ஆவணி ௴	இதழ் 8



कृष्ण कृष्ण महाबाहो भक्तानामभयङ्कर ।
त्वमेको दह्यमानानामपवर्गोऽसि संसृतेः ॥

க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ பக்தாநாமாபயங்கர |
த்வமேகோ தஹ்யமாநாநாமபவர்கோ஽ஸி ஸம்ஸ்ருதே: ||

ஹே கிருஷ்ணா, கிருஷ்ணா, வன்மை பொருந்தியவனே, தடந்தோள்களுடையவனே, பக்தர்களுக்கு அபயமளிப்பவனே, நீ ஒருவன்தான் சம்சாரத் தீயில் வெந்து துன்புறுகிறவர்களுக்கு விடுதலையளிப்பவனாக இருக்கிறாய்.

தண்அம் தாமரைக் கண்ணனே! கண்ணா!
  தவழ்ந்து எழுந்து தளர்ந்தது ஓர் நடையால்

மண்ணில் செம்பொடி ஆடிவந்து என்றன்
  மார்பில் மன்னிடப் பெற்றிலேன்! அந்தோ!

வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
  வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்

உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடுவினையேன்;
  என்னை என்செய்யப் பெற்றது எம் மோயே!

—குலசேகர ஆழ்வார்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள்வாக்கு

வெள்ளிக்கிழமை, டிசம்பர் 14, 1883

அன்றைய தினம் காலையில் சுமார் ஒன்பது மணி இருக்கும். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறைக்கு அருகிலுள்ள தென்கிழக்குத் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தார். ராம்லாலும் அவருக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார். ராக்காலும் லாட்டுவும் இங்கும் அங்கும் சென்றுகொண்டிருந்தனர். அப்போது ம— அங்கு வந்து ஸ்ரீராமகிருஷ்ணரின் முன்னிலையில் சாஷ்டாங்கமாக விழ்ந்து நமஸ்கரித்தார்.

பரமஹம்சர் அவரிடம் அன்பு ததும்ப, “ஆகா, நீ வந்துவிட்டாயா! மிகவும் நல்லது. இன்று ஒரு நன்னாள்” என்று ஆதரத்துடன் இனிய குரலில் கூறினார்.

ம — ஸ்ரீராமகிருஷ்ணருடன் சில நாள் தங்கியிருந்து ஆத்மசாதனம் பழக வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், “நீ சிறிதளவு முயற்சி செய்து ஞானசாதனம் பழகினால் போதும்; உடனே யாரோ ஒருவர் முன்வந்து ‘இப்படி, இப்படிச் செய்’ என்று உன் ஆன்மிக முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார்” என்று ம—விடம் சமீபத்தில் ஒரு நாள் சொல்லியிருந்தார்.

“இங்கே காளிகோவிலிலுள்ள அதிதிசாலை (விருந்தினர் விடுதி)யில் நீ தினமும் உணவு உட்கொள்வது சரியல்ல. இந்த அதிதிசாலை துறவிகளுக்கும் ஏழை எளியவர்களுக்கும் இலவசமாக உணவு வழங்குவதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீ இங்கே சில நாள் தங்கியிருக்க வரும்போது உனக்குச் சமையல் செய்வதற்காகச் சமையற்காரன் ஒருவனையும் உன்னோடு அழைத்துவா” என்றும் பரமஹம்சர் ம — விடம் கூறியிருந்தார். அவ்விதமே குருதேவரின் அறிவுரைக்கிணங்க ம — ஒரு சமையற்காரனைத் தம்முடன் அழைத்து வந்திருந்தார். ம — அழைத்து வந்திருந்த சமையற்காரன் இன்ன இடத்தில் சமைக்கலாம் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் இடத்தைக் காட்டினார். மேலும் ம — பால் அருந்துவார் என்பது தெரிந்து, குருதேவர் பால்காரனிடம் சொல்லிப் பாலுக்கு ஏற்பாடு செய்து தரும்படி ராம்லாலிடம் தெரிவித்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ராம்லால் அத்யாத்ம ராமாயணத்திலிருந்து படிக்க ஆரம்பித்தார். அவர் படித்ததை குருதேவரும் ம—வும் அமர்ந்து ஊன்றிக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

சிவதனுசை முறித்தபின்பு ஸ்ரீராமபிரான் சீதையைத் திருமணம் செய்துகொண்டார். சீதாபிராட்டியுடன் அவர் அயோத்திக்குச் சென்றுகொண்டிருந்தபோது வழியில் பரசுராமர் தசரதராமரை எதிர்த்தார். பரசுராமர் ஸ்ரீராமபிரானுக்குப் பெருந் தொந்தரவுகளை உண்டாக்கினார். பரசுராமர் ஒரு வில்லை ஸ்ரீராமபிரானிடம் கொடுத்து, அதில் நாணேற்றும்படி சவால் விடுத்தார். இதையெல்லாம் கண்டு தசரதர் பயத்தால் மிகவும் நடுநடுங்கினார். ஆனால் ஸ்ரீராமபிரானே புன்முறுவலுடன் அந்த வில்லைத் தமது இடக்கையால் எடுத்து மிகவும் சுலபமாக நாணேற்றினார். பிறகு அவர் அந்த வில்லில் அம்பைத் தொடுத்து நாணை இழுத்து, “இப்போது இந்த அம்புக்கு

எது இலக்கு என்று சொல்லுங்கள்'' என்று பரசுராமரை நோக்கி வினவினர். ஸ்ரீராம பிரான் தொடுத்த அம்பு பரசுராமரின் கர்வத்தை மாய்த்தது. கர்வம் அழிந்துபோன வுடன் பரசுராமர் சாஷ்டாங்கமாகப் பணிந்து ஸ்ரீராமபிரானை வணங்கினர். அவர் ஸ்ரீராம பிரானை சாட்சாத் பரப்பிரம்மம் என்று அறிந்து ஸ்துதி செய்தார்.

பரசுராமர் செய்த ஸ்துதியைக் கேட்டுக் கொண்டிருந்தபோதே ஸ்ரீராமகிருஷ்ணர் தெய் விகப் பரவசத்தில் லயித்துவிட்டார். அந்த நிலையில் இருந்தபடியே அவர் இடையிடையே 'ராம், ராம்' என்று ராமநாமத்தை மெல்லிய குரலில் இனிமையாக ஓதினர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ராம்லாலிடம்): இப்போது குகனைப்பற்றிக் கேட்கலாம்.

ராம்லால் குகனின் வரலாற்றை, 'பக்த மாலா' என்ற நூலிலிருந்து படிக்க ஆரம் பித்தார்.

தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த குகன் ஸ்ரீராம பிரானின் நெருங்கிய நண்பனுக விளங்கினன். தசரத மன்னனின் வாக்கைக் காக்க ஸ்ரீராம சந்திரமூர்த்தி சீதையோடும் லட்சுமணனேடும் வனவாசத்தை மேற்கொண்டபோது வழியில் குகனைச் சந்தித்தார். அவர்கள் கங்கையைக் கடப்பதற்கு, குகன் அவர்களுக்குப் படகை ஓட்டி உதவி செய்தான். குகனின் உண்மையான அன்பைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்த ஸ்ரீராம பிரான் குகனை மார்போடு கட்டித் தழுவிக் கொண்டார். குகன் ஸ்ரீராமசந்திரமூர்த்தி யிடம் முழு அளவில் தன்னை ஆத்மசமர்ப்பணம் செய்துகொண்டுவிட்டான். குகனிடம், தாம் மரவுரி தரித்தும், கனி கிழங்கு மூலிகை வகைகளை உணவாகக் கொண்டும் பதினன்கு வருஷகாலம் வனவாசம் செய்யப்போவதாக ஸ்ரீராமபிரான் தெரிவித்தார். ஆரண்யவாச காலம் முடிந்தபின்பு அயோத்திக்குத் திரும்பும் வழியில் குகனைத் தாம் சந்திப்பதாக அவர் வாக்குக் கொடுத்தார்.

ஸ்ரீராமபிரான் பதினன்கு வருஷகாலம் வன வாசம் செய்வார் என்றும், சடைமுடி தரித்து வாழ்வார் என்றும் சொல்லக் கேட்டு, குகனும் சடைமுடி தரித்தும், கனி கிழங்கு மூலங்களை மட்டுமே உணவாகக் கொண்டும் ஸ்ரீராம பிரானின் சந்திப்பை எதிர்நோக்கிப் பதினன்கு ஆண்டுக்காலம் பொறுமையோடு காத்திருந் தான். ஆனல் பதினன்கு ஆண்டுக்காலம் முடிந்த பின்னும் ஸ்ரீராமபிரான் திரும்பி வராததைக் கண்டு குகன் அக்கினிப் பிரவேசம் செய்யத் தீ மூட்டினன். அந்தத் தீயில் குகன் குதிக்க இருந்த சமயத்தில் ஸ்ரீராமதூதராக ஆஞ்சனேயர் அங்கு வாயுவேகத்தில் விரைவாக வந்து சேர்ந்தார்.

அவர் ஸ்ரீராமபிரான் வந்துகொண்டிருக்கும் செய்தியைக் குகனுக்குத் தெரிவித்து அவனை ஆறுதல்பெறச் செய்தார். சிறிது நேரத்திற் குள்ளாகவே ஸ்ரீராமபிரானும் சீதாபிராட்டி யும் வீற்றிருந்த புஷ்பக விமானம் ஆகாய மார்க்கமாக அங்கு வந்து சேர்ந்தது. அவர்களைக் கண்டதும் குகன் எல்லையற்ற பேரானந்தத்தில் திளைத்தான்.

* * *

நண்பகல் உணவிற்குப் பிறகு ஸ்ரீராம கிருஷ்ணர் சிறிது ஓய்வுகொள்ளத் தமது படுக்கையில் படுத்திருந்தார். ம — ஸ்ரீராம கிருஷ்ணரின் அருகில் தரையில் அமர்ந்திருந் தார். சிறிது நேரத்திற்குள் டாக்டர் சியாமாவும் மற்றும் சில பக்தர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். படுத்திருந்த குருதேவர் எழுந்து உட்கார்ந்துகொண்டு, வந்தவர் களுடன் உரையாட ஆரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: எப்போதுமே ஒருவன் கர்மத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது இல்லை. பிஞ்சு தோன்றியவுடன் பூ தானகவே உதிர்ந்துவிடுவது போல, ஈசுவர அனுபூதியைப் பெற்றபின்பு கர்மங்கள் தாமாகவே ஒருவனை விட்டு விலகிவிடுகின்றன.

ஈசுவரனை அனுபூதியில் அறிந்துகொண்டவன் அதன்பிறகு சந்தியாவந்தனம் போன்ற நித்திய கர்மங்களை அனுஷ்டிப்பதில்லை. அவன் விஷ யத்தில் சந்தியாவந்தனம் காயத்திரி மந்திரத் தில் ஒடுங்கிவிடுகிறது. அப்போது காயத்திரி மந்திரத்தை மட்டும் ஜபம்செய்தாலே போதும். காயத்திரி மந்திரமோ ஓங்காரத்தில் லயமாகி விடுகிறது. அந்த நிலையில் காயத்திரி மந்திரத் தையுங்கூட ஜபிக்க வேண்டிய அவசியம் இல்லை; வெறுமனே 'ஓம்' 'ஓம்' என்று பிரணவத்தை ஜபம் செய்து வந்தால் போது மானது.

சந்தியாவந்தனம் போன்ற நித்திய கர்மாக்களை எவ்வளவு காலத்திற்கு ஒருவன் அனுஷ்டிக்க வேண்டும், தெரியுமா? ஹரிநாமத் தையோ ராமநாமத்தையோ உச்சரிக்கும் போதே உடலில் மயிர்க்கூச்சு ஏற்படுதல், கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்குதல் முதலிய தெய்விக உணர்ச்சிகள் வரும் வரையிலும் ஒருவன் நித்திய கர்மங்களைச் செய்துவர வேண்டும். பணம் வேண்டியோ அல்லது நீதிமன்றத்தில் வழக்கு வெற்றி பெறுவதற் காகவோ சிலர் கடவுளை வணங்குகிருர்கள், பூஜை முதலிய செய்கிருர்கள். அப்படிச் செய்வது சரியல்ல.



உன் தாயை மறந்துவிடாதே!

சகோதரி நிவேதிதை இந்துமதத்தின் தாயகமான இந்தியாவின்மீது பெரிதும் பக்திகொண்டிருந்தார். பாரதநாட்டின் வரலாற்றுக்கே அவர் முக்கியத்துவம் கொடுத்தார். இந்து மதம், இந்தியப் பண்பாடு. இந்திய விளையாட்டுக்கள் போன்ற வகையில் அமைந்த இந்தியப் பாரம்பரியங்களைக் காத்து வளர்த்து வருவதிலேயே அவர் அதிக ஆர்வம் காட்டினார்.

சகோதரி நிவேதிதை 1902-ஆம் ஆண்டு துர்க்காபூஜை சமயத்தில், நாக்பூருக்குச் சென்றிருந்தார். அப்போது மோரிஸ் கல்லூரி (Morris College) மாணவர்கள் சகோதரி நிவேதிதையின் தலைமையில், ஒரு பரிசளிப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்த மாணவர்களின் முக்கிய நோக்கம், வீராங்கனையாக விளங்கிய சகோதரி நிவேதிதையின் சொற்பொழிவைக் கேட்க வேண்டும் என்பது தான்.

இந்த விழா, நீல் நகரப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த (Neil City School) வரவேற்பறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிவேதிதை விழாவிற்கு வந்து பரிசுகளை வழங்கினார். மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அவர் பேசியபோது பின்வரும் கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்:

“நீங்கள் அந்நிய நாட்டு விளையாட்டாகிய இந்தக் கிரிக்கெட் விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டித் திறமையுடன் ஆடிப் பரிசுகளைப் பெறுவது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் இந்த விளையாட்டு விளையாடுவதில் இருக்கும் ஆர்வத்தினால் நீங்கள் உங்கள் நாட்டு அதாவது பாரதநாட்டு வீர விளையாட்டுக்களை மறந்து புறக்கணித்தது குறித்து எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. மேலும், நீங்கள் அந்நியநாட்டு விளையாட்டாகிய கிரிக்கெட் போட்டிக்குப் பரிசு அளிப்பதற்காக என்னை அழைப்பீர்கள் என்பது எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நான் இந்த விழாவில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டிருக்கவே மாட்டேன்.

“இந்த நாட்களில் நாம் ஆயுதங்களை வைத்து அன்னை துர்க்கையைப் பூஜைசெய்ய வேண்டும். அப்படிப்பட்ட நேரத்தில் வீரம் மிக்க கத்தியை நீங்கள் எப்படி மறந்தீர்கள்? ஏன் மறந்தீர்கள்? இந்த ஆயுதபூஜை நாளில் மராட்டிய அரசர்கள் ஆயுதம் தாங்கிய வீர விளையாட்டுக்களையே கண்டு களிப்பார்கள், அப்படி இருக்கும்போது நீங்கள் அத்தகைய வீர விளையாட்டுக்களை மறந்திருப்பது என் மனதிற்கு மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. உங்களுடைய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நமது இந்தியப் பாரம்பரியத்திற்கு ஏற்புடைய வீர விளையாட்டுக்களையே காண நான் இங்கு வந்தேன்’’ என்று சகோதரி நிவேதிதை கூறியதும், கல்லூரி முதல்வரும் ஆசிரியர்களும் உடனே கத்திச் சண்டை, கபடி, சிலம்பம் முதலிய விளையாட்டுக்களை விளையாடத் தெரிந்த மாணவர்களைத் தேட முற்பட்டனர்.

முடிவில் ஜி. வி. தேஷ்முக் என்பவரைக் கண்டு பிடித்தனர். அவரைக் கொண்டு கத்திச் சண்டை, சிலம்பம் போன்ற ஹிந்து ராஷ்டிரத்

திற்கே உரிய வீர விளையாட்டுக்களை விளையாடிக் காட்ட ஏற்பாடு செய்தார்கள்.

அடுத்த நாள் அத்தகைய ஹிந்து ராஷ்டிர வீர விளையாட்டுக்கள் சகோதரி நிவேதிதைக்கு மட்டுமே ஏற்பாடு செய்து காட்டப்பட்டன. மூன்றுமணிநேரம் வீர விளையாட்டுக்கள் நடைபெற்றன. அவை முடிந்ததும் சகோதரி நிவேதிதை மிகவும் மகிழ்ச்சியுடன் ஜி. வி. தேஷ்முக்கை அழைத்து, "நீங்கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள்தாமே?" என்று வினவினார். ஆனால் உண்மையில் தேஷ்முக் ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெளியிலிருந்து விளையாட்டிற்காக அழைத்து வரப்பட்டிருந்தார்கள்.

மூன்று மணிநேரம் இந்திய வீர விளையாட்டுக்களைப் பார்த்து மகிழ்ந்த நிவேதிதை முடிவில் அவர்களைப் பாராட்டும் வகையில் எழுந்து பேசியபோது சொன்னார்: "என்னுடைய இந்திய மாணவச் செல்வங்களே! நம்முடைய கல்லூரிகள் ஒவ்வோர் ஆண்டும் பல பட்டதாரிகளை உருவாக்கி வெளியே அனுப்புகின்றன. ஆனால் அவர்களில் பெரும்பாலானவர் உடல் வலிமையின்றியும் வீரமின்றியும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களையும் தங்களுடைய தாய் சகோதரி மனைவி ஆகியோரையும் தக்க சமயத்தில் காக்கும் வலிமையற்று, போர்த் திறமை சண்டைப் பயிற்சியின்றி, சக்தியற்று இருக்கிறார்கள்.

"வலிமையும் தேசபக்தியும் நிறைந்த மாணவர்களே இந்த நாட்டிற்குத் தேவை. வீரம் மிக்க மாணவர்களே நமது நாட்டிற்குத் தேவைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்களை உருவாக்காமல், நாம் நமது நேரத்தையும் திறமையையும் மென்மையான அந்நிய நாட்டு விளையாட்டுக்களில் செலவிடக்கூடாது. அந்நிய நாட்டு விளையாட்டுக்களைத் திறமையாக விளையாடி அதில் தேர்ச்சிபெற்று அந்நிய நாட்டவருக்குப் பெருமை தேடித் தருவதில் நமக்கு என்ன மேன்மை இருக்கிறது? எனவே ஆண்மை தரக்கூடிய வீர விளையாட்டுக்களையே நமது ராஷ்டிரம் வேண்டியிருக்கிறது. இந்திய வீர விளையாட்டுக்களை விளையாடும் திறமையுடைய மாணவர்கள்தாம் பாரத ராஷ்டிரத்திற்குத் தேவைப்படுகிறார்கள். இனி அத்தகைய வீர மாணவர்களை உருவாக்க நாம் முயல்வோமாக!" என்று வீரமாதா நிவேதிதை உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்டார்.

சகோதரி நிவேதிதை தம்மைப் பரிசளிக்கும் விழாவிற்கு அழைத்திருக்கிறார்கள் என்று மகிழ்ந்து, அவர்களைச் சம்பிரதாயத்திற்காகப் பாராட்டிப் பேசவில்லை. அவர்களைப் புகழாததுடன் உண்மையில் மாணவர்களுக்கு எது மிகவும் அவசியமாகத் தேவையோ அதையே அவர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திப் பேசினார். ஹிந்து ராஷ்டிரத்தின் சிறப்பு அம்சங்களை வளர்ப்பதிலும் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் மாணவர்களுக்கு உள்ள கடமையை நிவேதிதை எடுத்துக் காட்டினார்.

நமது சொல் செயல் சிந்தனை அத்தனையும் நமது தாயகத்திற்கு, நமது பண்பாட்டிற்கு, நமது மதத்திற்கு, நமது மகான்களுக்கு, நமது நாட்டில் தோன்றிய வீரர்களுக்குப் பெருமை சேர்ப்பதற்காகவே இருக்க வேண்டும்.

முதலில் நாம் நமது தாயை அதாவது நமது ஹிந்து பாரம்பரியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்; ஹிந்து மதத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்; ஹிந்துப் பண்பாடுகள் நம் கண்ணெதிரிலேயே சிதைவதற்கு அனுமதிக்கக்கூடாது.

நமக்குள் சிறு சிறு கருத்து வேற்றுமைகள் இருப்பினும், அவற்றை நாம் மறந்து, குழி தோண்டி ஆழப் புதைத்துவிட்டு, 'நாம் ஹிந்துக்கள்' என்ற சகோதரத்துவ உணர்வுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும்.

முதலில், நமது சொந்தத் தாயாகிய நமது மதத்தைப்பற்றியும் பண்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொண்டு அவற்றைப் பேணி வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் மிகப் பெருமளவில் கவனம் செலுத்த வேண்டும். அதைச் செய்து முடித்தபிறகும் நமக்கு நேரம் இருக்குமானால், அடுத்ததாக அடுத்த வீட்டுக்காரியாக விளங்கும் பிறநாட்டு மதங்கள் பண்பாடுகள் ஆகியவை பற்றித் தெரிந்துகொள்ள, பிறகு வேண்டுமானால் யோசித்துக்கொள்ளலாம்.

கண்ணனின் லீலை

அலங்காரம் தேவராஜன்

இறைவன் அண்டங்களைவிடப் பெரியவன். அணுவைவிடச் சிறியவன். எங்கும் நிறைந்திருப்பான். ஓரிடமும் நில்லாமல் கரந்திருப்பான்.

இறைவன் என்ற சொல்லிற்கு, 'எப்பொருளிலும் தங்குகிறவன்' என்று பொருள் கூறுவர்.

இறைமை என்பது காப்புக்கு உரிய சொல். ஒவ்வோர் உயிரும் விரும்பாதவற்றை நீக்கி, விரும்புகிறவற்றை அளித்துக் காக்கும் பொருட்டு உயிர்தோறும் தங்கியிருக்கிறான் இறைவன். எனவே காத்தற் கடவுளுக்கே இறைவன் என்ற சொல் மிகுதியும் பொருந்தும்.

விஷ்ணு, வாசுதேவன், நாராயணன் என்ற திருப்பெயர்களும் இந்த உண்மையையே குறிக்கும்.

விஷ்ணு-எங்கும் நிறைந்தவன். வாசுதேவன்—எங்கும் வசிப்பவன். நாராயணன் - உயிர்ப்பொருள் உயிரில்பொருள் அனைத்தையும் தனக்குச் சரீரமாக உடையவன். எவன் நாரங்களுள் ஒவ்வொன்றிலும் நிறைந்திருப்பவனோ அவன் நாராயணன். நாரம்-நித்தியமான பொருள்களின் கூட்டம்.

இவ்வாறு எங்கும் நிறைந்து எல்லாப் பொருளிலும் தங்கியிருக்கும் அருமைக்கு அருமையான எம்பெருமானை எளிமைக்கு எளிமையாக்கி அனுபவிக்கப் பக்தருலகம் பலவேறு வழிகளைக் கையாண்டு வருகிறது.

எல்லா உயிர்களுக்கும் தந்தையான இறைவனைக் குழந்தையாகப் பாவித்து அனுபவிப்பது வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும்.

கண்ணனுடைய எல்லையற்ற அழகுக்கு எல்லை கட்டி அவனைச் சின்னஞ்சிறு செல்வக்குழந்தையாக்கிச் சீராட்டிப் பாராட்டி மகிழ்வதில் பெரியாழ்வாருக்கு நிகர் பெரியாழ்வாரேதாம்.

பாசுரம் பாடுவதில் குழந்தையுள்ளம் படைத்தவர் அவர். பரந்தாமனைச் சீராட்டுவதில் தாயுள்ளம் படைத்தவர். கண்ணனை நினைத்துக் கொண்டுவிட்டால் அவர் உடனே தாயாகி விடுகிறார். இந்தத் தாய்மை இன்பம் தேவகிக்கும் யசோதைக்கும்கூடக் கொடுத்துவைத்திருக்குமோ என்னவோ, பெரியாழ்வாருக்குப் பரிபூர்ணமாகக் கொடுத்து வைத்திருக்கிறது.



இப்பொழுது அன்னையாக மாறுகிறார். தாதியர் குழந்தையைத் தொட்டிலில் இடுகிறார்கள். தொட்டிலோ துணித்தொட்டில். குழந்தை உறங்கவில்லை. கண்ணுறங்காத கண்ணனை, கைக்குழந்தையைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறாள் தாய். உடனே யசோதை குழந்தையை அள்ளி எடுத்து இடுப்பில் வைத்து அணைத்துக்கொள்கிறாள். 'என்னடா கண்ணா! என்னை இந்தப் பாடு படுத்துகிறாய்?' என்று முணுமுணுக்கிறாள் அவள்.

"தொட்டிலில் கிடக்கவிட்டாலோ, தொட்டிலைக் காலால் உதைத்துக் கிழித்துவிடுகிறான். மெத்தென்றிருக்கும் இந்தச் சின்னஞ்சிறிய கால் வலிக்குமே என்று ஒக்கலில் வைத்துக் கொண்டால், அங்கிருந்து நழுவி இடுப்பை

முறித்துவிடுகிறான். 'ஐயோ! நமக்கே இப்படி வலிக்கிறதே! குழந்தைக்கு எப்படி வலிக்கிறதோ!' என்று வலிய ஆசைதீர அள்ளி எடுத்து அரவணைத்துக் கொண்டாலோ, வயிற்றிலே பாய்ந்து உதைக்கிறான்.' இப்படிக் குழந்தைக்கு ஈடுகொடுக்கும் திராணி இல்லாமையால் நான் எவ்வாறு மெலிந்து போனேன் பாரடி!'' என்று சேடியை நோக்கி ஆற்றாமைப்படுகிறாள் அந்தத் தாய்.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்,
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்,
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்,
மிடுக்கி லாமையால் நான்மெலிந்தேன்
நங்காய்.

ஆழ்வாரின் உள்ளத்தில் பொங்கிப் பெருக்கெடுக்கும் அந்தத் தாய்ப்பாசம் நம் உள்ளங்களிலும் அல்லவா பிரவாகமெடுக்கிறது?

துணித்தொட்டிலில் துயில் வரவில்லை என்பதை அறிந்த தாதியர், ஆணிப்பொன்னாலான வேறொரு தொட்டிலுக்கு ஏற்பாடு செய்கின்றனர். நினைத்த மாத்திரத்தில் நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றும் செல்வத் திருமாளிகை அல்லவா அது? வெகு விரைவில் மாணிக்க வடம் பூட்டி வைரத் தொங்கல் இடப்பட்ட ஆணிப்பொன்னால் செய்யப்பெற்ற வண்ணச் சிறு தொட்டில் அருமையாகச்செய்து வந்துவிடுகிறது. அந்தத் தொட்டிலைப் பிரமனே செய்து கொடுத்திருக்கிறான் என்று பெருமைப்படும் அளவுக்கு அது அத்தனை சிறப்பாகவும் சிங்காரமாகவும் அழகாகவும் அற்புதமாகவும் திகழ்கிறது. அதில் குழந்தையை இட்டுத் தாலாட்டுவதும், அருமைக் குழந்தை அதில் கண்ணுறங்குவதும் பெருமைதான்.

'தாலே தாலேலோ' என்று தாய் தாலாட்டிக் கொண்டே இருக்கிறாள். அந்தத் தாலாட்டைக் கேட்டால் எந்தக் குழந்தையும் இசையில் லயித்துத் துயில் கொண்டுவிடும். ஆனால் அந்தப் பொல்லாத குழந்தை அவ்வளவு எளிதில் துயின்றுவிடுமா? அறிதுயில் கொள்ளும் அனந்தசயனக் குழந்தை அல்லவா? அந்தத் தத்துவத்தை அறியாமல் அறிந்து, சொல்லாமல் சொல்கிறது பெரியாழ்வார் திருமொழி.

நீராடற் பருவம் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உரிய பருவங்களில் ஒன்று. பெரியாழ்வார் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உரிய நீராடற் பருவத்தைக் கண்ணபிரானுக்குச் சார்த்திப் பாடியிருக்கும் அருமைப்பாடு உய்த்து உணரத்தக்கது.

கண்ணனை ஆணுக்கு ஆணாகவும் பெண்ணுக்குப் பெண்ணாகவும் அல்லவா சீராட்டிப் பாராட்டி வளர்க்கிறாள் அந்தப் பேறு பெற்ற தாய்? அன்றியும், கண்ணனிடம் ஆண் பெண் என்ற பேதத்திற்கு இடமேது?



ஒரு சமயம் பார்த்தால் ஆணாகக் காட்சியளிப்பான்; மறு சமயம் பார்த்தால் மோகினிப் பெண்ணாகவும் காட்சியளிப்பான். அவ்வப்போது ஏற்படும் மனோபாவங்களுக்கு ஏற்றபடி அனுபவித்துப் பாடுகிறது பெரியாழ்வாரின் தாயுள்ளம்.

நீராட வரமாட்டேன் என்று அடம்பிடிக்கும் சிறு குழந்தைக்கு எப்படியெல்லாம் ஆசை காட்டுகிறாள் அந்தப் பேராசைக்காரியாகிய தாய்!

''அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரவடிசில் முதலியவற்றைப் பாலிற்கலந்து பண்ணிவைத்திருக்கிறாளாம். நீ நீராடிவிட்டு அவற்றை உண்ண வரவில்லை என்றால் சேடிப்பெண்கள் புரளிபேசிக் கைகொட்டிச் சிரிப்பார்கள். அதற்கு இடங்கொடுக்காமல் நீராட வந்துவிடு'' என்று அழைக்கிறாள் தாய்.

கண்ணனைத் திருமஞ்சனமாட்டுவதென்றால் சாமானியப்பட்ட காரியமன்று. அவனைச் சமாளிப்பதே பெரும் பாடு. எண்ணெய்க் குடத்தை உருட்டிக் கொட்டிக் கவிழ்த்து விடுவான்.

இளம்பிள்ளைகளைக் கிள்ளி எழுப்பிவிடுவான். 'என்னடா இப்படிச் செய்கிறானே!' என்று பார்த்தால், கண்ணைப் புரட்டி விழித்துக் கொண்டு நிற்பான். "இப்படியெல்லாம் செய்யாதே. உண்பதற்கு இனிய அமுதக்கனிகள் தருவேன் வா, வந்து நீராடு" என்கிறாள் தாய்.

வருந்தி வருந்தி அழைக்கிறாள் தாய். அவன் வராமலே பாய்ச்சல் காட்டுகிறான். வா என்றவுடன் வந்துவிட்டால் அதில் என்ன சுகம் இருக்கிறது? அடம் செய்து அமர்க்களப் படுத்தும் குறும்புக்காரனைக் காண்பதில் தானே தாயுள்ளம் எல்லையற்ற இன்பத்தை அனுபவிக்கிறது?

அந்தக் குறும்புக் கொள்ளையை நேரில் கண்டு அனுபவிக்கும் நிலை போதாதா? ஆய்ச்சியர் வந்து கண்ணனின் திராக் குறும்புகளைச் சொல்லி முறையிட்டுக் கொள்ளும்போது அவளுக்கு உண்டாகும் மனநிலை இருக்கிறதே, அந்த இன்ப அனுபவத்துக்கும் பெருமைக்கும் ஈடு இணை ஏது?

இப்பொழுது கண்ணன் ஒரு சுட்டிப்பையன். ஆய்ச்சியர் இல்லமொன்றிலே பால் கறந்து, காய்ச்சுவதற்காக அடுப்பிலேற்றி வைத்திருக்கிறாள் ஆய்ச்சியர்சிறுமி. அவள் தாய் மேலைவீட்டில் நெருப்பு வாங்கிவரச் சென்றவள் அங்கேயே நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டு நின்றுவிடுகிறாள். அப்போது பார்த்துக் கண்ணன் வந்து பாலைச் சாய்த்துப் பருகிச் சென்றுவிட்டான். இந்தக் குறும்பை ஆய்ச்சியர் மூதாட்டி வந்து யசோதையிடம் முறையிட்டுக் கொள்ளும் அழகு இருக்கிறதே, அதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம், பார்த்துக்கொண்டே இருக்கலாம்!

பாலைக் கறந்தடுப் பேறவைத்துப்
  பல்வளை யாளென் மகளி ருப்ப,
மேலை யகத்தே நெருப்பு வேண்டிச்
  சென்றிறைப் பொழுதங்கே பேசிநின்றேன்,
சாளக் கிராம முடைய நம்பி
  சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்,
ஆலைக் கரும்பின் மொழி யனைய
  அசோதைநங் காய் உன் மகனைக் கூவாய்.

தந்தைநிலையிலிருந்து லீலாவினோதம் நிகழ்த்தும் எம்பெருமான் குழந்தைநிலைக்கு இறங்கி வந்து கொட்டமடிப்பதில் அவனுக்கும் குதூகலம்தான்; அதனைக் காண்பவர்க்கும் குதூகலம்தானே?

ஆய்ச்சியர் முறையீட்டைக் கேட்ட யசோதை குழந்தையைச் செல்லமாகக் கண்டிக்கவும் முற்படுகிறாள்.

கண்ணன் ஆயர்பாடியில் வந்து பிறந்தபோது அவனோடு ஆயிரம் பிள்ளைகள் சேரப்பிறந்தனர் என்பது பிரசித்தம்.

கண்ணன் கோகுலத்தில் குழந்தையாகப் பிறந்தபோது ஒவ்வொரு வீட்டிலும் கண்ணன் பிறந்தது போலத்தானே கொண்டாடி மகிழ்ந்தார்கள்? அத்தகைய மகிழ்ச்சியிலும் கோலாகலத்திலும்தானே கோபாலன் வந்து அவதரித்தான்? "ஆயிரம் கோகுலபாலர்களையும் உடன் அழைத்துக்கொண்டு தளர்நடை பயின்றுவரும் கண்ணா! ஆயர்பாடியில் பொன்போலக் காய்ச்சி வைத்திருக்கும் பால் தயிர் வெண்ணெய் முதலியவற்றைத் திருடி வயிறார விழுங்கிவிட்டு, இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்ற பாவனையில் கள்ளக்கபட நடையிட்டு வருகிறாயே! ஆயர்பாடியில் பால் கவர்ந்து உண்ணும் உனக்குப் பாலூட்ட வந்த பூதனை என்னும் பேய்மகள் பட்ட பாட்டை நினைக்கையில் நான் உனக்கு எவ்வாறு பால் ஊட்டுவேன்? நீ ஒன்றுமில்லாததற்கே பாடாய்ப் படுத்திவிடுவாய். இப்பொழுது பாலூட்டுகிறேன் என்று துணிந்துவிட்டால் என் கதி என்ன ஆகும்?" என்று, கதிகலங்கும் நிலையை வெளியிடுகிறாள் யசோதை. தாய்ப்பால் இருக்கும்போது திருட்டுப் பால் எதற்கு?

பெரியாழ்வார் தாம் கண்ட உண்மைக் காட்சியை, காட்சியுண்மையைப் பக்தருலகுக்குக் காட்டிச் சித்துவேலை செய்கிறார். விஷ்ணுசித்தர் அல்லவா அவர்? விஷ்ணுவைச் சித்தத்தில் நிறைத்துக்கொண்டவர், விஷ்ணு சித்து விளையாட்டு நிகழ்த்துவதில் விந்தை என்ன இருக்கிறது? பெரியாழ்வார் திருமொழி பேரின்ப நிலையை எட்டிப் பிடிக்கும் சித்து வேலைதானே?

★



வீ ர ம்

'நாடோடி'

ராஜபுதனத்தில் கேல்வாடா என்னும் பிரதேசத்தைப் பதினறு வயது இளைஞன் புத்தன் ஆண்டு வந்துகொண்டிருந்த சமயம் மேவாட் நாட்டை அக்பர் படையெடுத்திருக்கிருர் என்ற செய்தி கிடைத்தது. இதைக் கேட்டதும், அவன் தாய் ராஜமாதா கர்மதேவி மகனைப் பார்த்து, "மகனே! மேவாட் நகரை அக்பர் படையெடுத்திருக்கிருர் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. நீ உடனே உன் சேனையை அழைத்துக்கொண்டு மேவாட் அரசர் மகாராணுவின் உதவிக்குச் செல்" என்று சொன்னுள்.

அதைக் கேட்ட புத்தன், "மகாராணு எனக்கு அழைப்பு அனுப்பாமல் நான் எப்படிச் செல்வது?" என்று கேட்டான்.

"தாய்நாட்டைக் காக்கச் செல்வதற்கு உனக்கு அழைப்பு ஒன்றும் தேவையில்லை. நீ இளவயதினனுக இருப்பதனுல் உன்னைச் சிரமப்படுத்த வேண்டாம் என்று அரசர் பேசாமல் இருந்திருக்கலாம். அரசர் அழைக்காவிட்டால் போகிருர். தாய்நாடு உன்னை அழைக்கிறது. ஆகவே உன் சேனைகளை அழைத்துக்கொண்டு உடனே போ. உனக்கு மங்களம் உண்டாகட்டும்" என்ருள் ராஜமாதா கர்மதேவி.

இதைக் கேட்ட புத்தன் தாயை வணங்கிவிட்டு, தன் மனைவி கர்ணவதியிடமும், தங்கை கமலாவதியிடமும் விடை பெற்றுக்கொண்டு சேனையுடன் சித்தூர் நோக்கிச் சென்ருன்.

மகன் சென்றதும் ராஜமாதா கர்மதேவிக்கு இருப்புக் கொள்ளவில்லை. மகனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள, தானும் ரணகளம் செல்வதுதான் உசிதம் என்று தீர்மானித்தாள். ஆகவே மகள் கமலாவதியிடமும், மருமகள் கர்ணவதியிடமும் தன் உத்தேசத்தைச் சொன்னுள்.

இதைக் கேட்ட கமலாவதி, "அம்மா! சிறுவயதிலிருந்து எனக்கு வாள் பிடித்து யுத்தம் செய்யக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே நானும் உங்களோடு உதவிக்கு வருகிறேன்" என்று சொன்னுள்.

கர்ணவதியும், "அம்மா! கணவர் யுத்தத்திற்குச் சென்றிருக்க நான் மட்டும் தனியாக இங்கு என்ன செய்வது? நானும் தங்களோடு வருகிறேன்" என்று சொன்னாள்.

மூன்று பேரும் குதிரைகளில் ஏறிக்கொண்டு, ஆயுதங்களை எடுத்துக் கொண்டு யுத்தகளத்திற்குச் சென்றார்கள். இதற்கிடையில் மகாராணாவைக் கண்டு சென்ற புத்தன் சேனைக்கு உபதளபதியாக நியமிக்கப்பட்டு, யுத்தபூமியில் சென்று யுத்தம் புரிந்துகொண்டிருந்தான்.

யுத்தகளத்தில் இருந்த அக்பர் புத்தனைப் பின்பக்கத்திலிருந்து தாக்கத் தீர்மானித்து, ஒரு பகுதிச் சேனையைத் தம்மோடு எடுத்துக்கொண்டு ஒரு ரகசிய வழியாகச் சென்றுகொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு மலைக்குப் பின்னாலிருந்து துப்பாக்கி வெடிகள் சரமாரியாகச் சேனைகள்மீது விழ, அநேகர் இறந்தனர். அந்த இடத்தில் எதிரிப் படை இருக்கும் என்று அக்பர் எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவர் ஆச்சரியப்பட்டார். உடனே தம் ஒற்றன் ஒருவனைக் கூப்பிட்டு, மலைக்குப் பின்னால் எத்தனை பெரிய சேனை இருக்கிறது என்று கண்டுபிடிக்கச் சொன்னார்.

ஒற்றன் ஒரு மரத்தின் மேல் ஏறிப் பார்த்துவிட்டு, "மூன்றே மூன்று பெண்கள் அங்கே இருந்துகொண்டு துப்பாக்கியினால் நம் படையைச் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னான்.

ஆம், புத்தனின் உதவிக்குப் புறப்பட்ட அவன் தாய், சகோதரி, மனைவி ஆகிய மூவருமே அந்த மூன்று பெண்கள். அக்பர் புத்தனின் சேனையைப் பின்புறமிருந்து தாக்கப்போகிறார் என்று தெரிந்து, அவர்கள் மூவரும் மலைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அக்பரின் சேனையைத் தாக்கினர்.

அக்பர் தம் படைகளை மலையை நோக்கி முன்னேறச் சொன்னார். முதலில் புத்தனின் சகோதரி கொல்லப்பட்டாள். ஆனால் தாய் கவலைப்படாமல் தொடர்ந்து முகலாயச் சேனைகளை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தாள். சீக்கிரமே தாயும் மனைவியும் அடிபட்டு வீழ்ந்தனர்.

இதற்கிடையில் தன்னை எதிர்நோக்கி வந்த படைகளைப் புத்தன் முறியடித்துவிட்டு, பின்பக்கமாக அக்பர் வந்துகொண்டிருக்கிறார் என்று தெரிந்து, அவரை எதிர்க்கத் திரும்பி வந்தான்.

வழியில் தாயும் மனைவியும் அடிபட்டுக் கிடக்கவே அவர்களுடைய தலைகளைத் தன் மடியில் வைத்துக்கொண்டான். மனைவி கணவன் மடியில் உயிரை விட்டாள். தாய், "ஏன் இங்கு எனக்காக நிற்கிறாய்? நமது மதத்தையும் நமது பண்பாட்டையும் அழிக்கும் முகலாயர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். போய் அந்த எதிரிகளைத் தாக்கு; அதுதான் உன் கடமை" என்று சொல்லிக்கொண்டே உயிர் விட்டாள். அக்பரை எதிர்த்து நின்ற புத்தனும் சீக்கிரமே ரணகளத்தில் உயிரை விட்டான்.

இரண்டு குன்றுகள்

கி. வா. ஜகந்நாதன்

இறைவன் பல வகையான திருக்கோலங்களை அவ்வப்போது எடுத்துக்கொண்டு, அந்தத் திருக் கோலங்களுக்கு உரிய தனி இலக்கணங் களுடனும் திருநாமங்களுடனும் தோன்று கிறன். சோமாஸ்கந்தர், நடராஜர், தட்சிணு மூர்த்தி, இடபாரூபர் என்பவை அவ்வாறு திருவுருவம் கொண்ட வடிவங்களே.

மாதிருக்கும் பாதியனுக உள்ள திருவுருவம் அர்த்தநாரீசுவரக் கோலம். அப்படியே மாலிருக்கும் பாதியனுகவும் அவன் கோலம் கொண்டான். அந்த மூர்த்தியைக்கேசவார்த்தர் என்று சொல்வார்கள். ஒரு பாதி மால் கொள நிற்கும் அந்த மூர்த்தியைச் சங்கரநாராயணர் என்றும் சொல்வார்கள்.

சங்கரநயினுர் கோயில் என்ற தலத்தில் சங்கரநாராயணர் சந்நிதி இருக்கிறது. இடப் பாகம் திருமாலாகவும் வலப்பாகம் சிவபெருமா ளுகவும் காட்சியளிக்கும் பெருமானை அங்கே தரிசிக்கலாம்.

திருமாலோடு இணைந்து நின்றும், வேருக நின்றும் காட்சியளிக்கிருன் சிவபெருமான். ஒரு பக்கம் சிவபெருமானுக்கு உரிய செஞ் சடையும் மற்ருெருபக்கம் கருங்குழலும் அமைந் திருக்கும்; அப்படி நின்ற கோலத்தை இப்போது காரைக்காலம்மையார் நினைக்கிருர்.

இறைவனுடைய பல வகைத் திருக்கோலங் களையும் அங்கங்களையும் பராக்கிரமங்களையும் அருள்விளையாடல்களையும் எண்ணி எண்ணி இன்புறுவது அடியார்கள் இயல்பு. மனதுக்கு ஏதாவது வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது கண்டபடி நம்மை எங்கெங்கோ இழுத்துச் செல்லும். அதற்கு இறைவனுடைய திருக்கோலங்களை நினைக்கும் பழக்கத்தை உண்டாக்கினுல் அவற்றைப் பற்றியே எண்ணி எண்ணிப் பொழுது போக்கும்.

சுறுசுறுப்பான குழந்தை எதையாவது எடுத்து மோதித் துன்பம் அடையும். அதற்காக அதற்குப் பல விதமான பொம்மைகளைக் கொடுத்தால் அவற்றில் மனம் செலுத்தி விளை யாடும். மனம் என்னும் குழந்தைக்கும் இறைவ னுடைய கோலங்களை அறிமுகப்படுத்தினுல் அது எப்போதும் அவற்றையே எண்ணி, வேறு தீய நினைவுகளைக் கொள்ளாமல் இருக்கும்.



இறைவனுடைய திருக்கோலத்தை வருணித் துச் சொல்லும் பாடல்களைப் படித்து உணர் வதனுல் நம் மனதுக்கு நல்ல பயிற்சிஉண்டாகும். கண்டபடி திரியாமல் தெய்விக வட்டத்துக்குள் உலாவும். அதற்காகத்தான் கோயில்களும் விக் கிரகங்களும் அமைந்திருக்கின்றன. இறைவன் அவற்றில் இருக்கிருனு என்று சிலர் கேட் பதுண்டு. எவ்விடங்களிலும் உறையும் இறைவன் அவற்றில் இருக்க மாட்டானு? ஆனுல் இறைவன் எல்லா இடங்களிலும் இருப்பதை நாம் உணர்வதில்லையே? அவனை நினைப்பூட்டும் சின்னங்களைக் கண்டால் அவனையே எண்ணி வாழும் நிலை ஏற்படும். ஊருக்குச் சென்றிருக்கும் காதலனுடைய பிரிவை ஆற்ற விரும்பும் காதலி

அவனுடைய படத்தை வைத்துக்கொண்டு தன் துயரத்தை ஆற்றிக்கொள்வது போன்றது இது.

சிவபெருமான் தனியாக நிற்பவன். அவன் இப்போது திருமாலோடு மீண்டும் இசைந்து நிற்கிறுன். முன்பு தன்னிடம் ஒன்றி அடங்கிய திருமாலை வெளிப்படுத்திக் காத்தல் தொழிலை அவனிடம் ஒப்பித்தான். இப்போது யாவரும் காண வடிவில் அவனேடு ஒன்றி இணைந்து சங்கர நாராயணனுகக் கோலம் காட்டுகிறுன். அந்தக் கோலம் எப்படி இருக்கிறது?

இப்படி ஒரு வினவை எழுப்பிக்கொள்கிறுர், காரைக்காலம்மையார்.

மின்போலும் செஞ்சடையான்
மாலோடு மீண்டு இசைந்தால்
என்போலும் காண்பார்கட்கு
என்பிரேல்.

நாம் கேட்காவிட்டாலும், நாம் கேட்பதாக வைத்துச் சொல்கிறுர். நம்மை நல்ல பிள்ளைகளாக்கி, "இப்படி இறைவன் திருக்கோலம் கொண்டால் அது எப்படி இருக்கும் என்று கேட்பீர்களானுல்..." என்று தொடங்குகிறுர். அதைக் கேட்ட பிறகாவது நாம் இறைவன் திருக்கோலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

நாம் அவரைக் கேட்காவிட்டாலும் நமக்காக அவர் ஒரு கேள்வியை எழுப்பி அதை நாம் கேட்பதாக வைத்துச் சொல்லும்போது நாம் சும்மா இருக்கலாமா? நாம் அந்தக் கேள்வியைக் கேட்டதாக எண்ணிக்கொண்டு அம்மையார் கூறும் விடையைக் கவனிக்கத் தொடங்கலாம்.

அவர் அந்தத் திருவுருவத்தை விவரமாக வருணிக்கப் புகுந்தால் நீண்ட நேரமாகும். அதைக் கேட்க நமக்குப் பொறுமை இராது. ஆகையால் ஓர் உவமையைச் சொல்லிச் சுருக்கமாக விளக்குகிறுர்.

மேருவைப் பொன்மலை என்று சொல்வார்கள். சிவபெருமான் செம்பொன் வண்ணத் திருமேனியுடையவனுதலால் அவன் பொற்குன்று போலக் காட்சி தருகிறுன். திருமாலோ நீல நிறமுடையவர். அவருடைய திருமேனிக்கு நீலமணியை உவமை கூறுவர்.

கடவுள் அருள் இல்லையேல் ஒரு சிறு காரியத்தைச் செய்வதுகூட ஒரு பெரும் கஷ்டமாகிவிடும்

—சாணக்கியன்

பூஜை, சேவை, நியமம், விரதம் எல்லாம் வெறும் விளையாட்டுக்களே. ஆண்டவனை உள்ளத்தால் தொழ வேண்டும்.

—கபீர்

மெலிந்தோரை நீ இம்சிக்காதே; வெறும் தோலால் ஆக்கப்பட்ட துருத்தியினின்று வரும் காற்று இரும்பையே சாம்பலாக்குவது போல அவர்களுடைய பார்வை எரிக்கும் சக்தியுடையது.

—கபீர்

"மண்ணுறு மணிபாய் உருவினவை"

"நின்னது திகழ்ஒளி சிறப்பிருள் திருமணி"

என்று பரிபாடல் கூறும்.

பொற்குன்றும் நீலமணிக்குன்றும் இணைந்து ஒன்றி நின்றுல் எப்படி இருக்கும்? மாலிருக்கும் பாதியனுகிய சங்கரநாராயணப் பெருமான் அவ்வாறு காட்சியளிக்கிறுன். செம்பொற் குன்றுடன் நீலமணிக்குன்று பாதி பாதியாக இணைந்து நின்றுல், ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட வண்ணம் உடைமையால் இரண்டும் நன்றுக விட்டு விளங்கும்.

சிவபெருமான் தனக்குள் திருமாலை அடக்கிக் கொள்ளாமல் இப்படி இணைந்து நிற்கும்போது அப்பெருமானும் பளிச்சென்று தோன்றுகிறுன்; திருமாலும் விளக்கமாகக் காட்சியளிக்கிறுர்.

அவ்விருவரும் உயர்ந்து ஓங்கி நிற்கும்போது அந்த இரண்டு குன்றுகளும் ஓங்கி உயர்ந்து நிற்பது போன்ற எழிற்காட்சி தோன்றும்.

தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றும் தாம்உடனே
நிற்கின்ற போலும் நெடிது.

மேருமலையும் நீலகிரியும் இணைந்த தோற்றம் உலகில் இல்லாதது. ஆகவே இது இல்பொருள் உவமை. இரண்டு கண்களாலும் அந்தத் திருக் காட்சியை மாறி மாறிப் பார்க்கலாம். சிவபக்தி

யுடையவர்கள் அப்பெருமானை முதலில் பார்த்து அவனோடு இணைந்திருக்கும் திருமாலையும் சேவிக்கலாம். திருமாலன்புடையவர்கள் திருமாலைப் பார்த்து அப்படியே சிவபெருமானையும் தரிசிக்கலாம்.

மின்போலும் செஞ்சடையான்
மாலோடு மீண்டுஇசைந்தால்
என்போலும் காண்பார்கட்கு
என்பிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றும்
தாம்உடனே
நிற்கின்ற போலும் நெடிது.

மின்னலைப் போன்ற செம்மையையுடைய சடையையுடைய சிவபிரான் திருமாலோடு, பிரிந்து நில்லாமல் மீண்டு ஒன்றி இணைந்து நின்றால், 'அந்தக் கோலம் தரிசிப்பவர்களுக்கு எதைப் போல இருக்கும்?' என்று கேட்பீர்களானால், சிவபிரானைப் போன்றுள்ள பொன் மலையும் நீலமணிக்குன்றும் உடன் ஒன்றி உயர்ந்து நிற்கின்றதைப் போல இருக்கும்.

[மின்-மின்னல். மால்-திருமால். காண்பார்கட்கு என்போலும் என்றிரேல். தன் என்றது சிவபிரானை. மணி என்பது எல்லாவகை மணிகளையும் குறிப்பதாதலின் தெளிவாகத் தெரியும் பொருட்டு நீல மணிக்குன்று என்றார். தாம்: அசை. உடனே-ஒருங்கே. நிற்கின்ற: நிற்கின்றது என்ற தொழிற்பெயர் ஈறு குறைந்து நின்றது; செய்யுள் விகாரம். நிற்கின்றவை என்று வினையாலணையாகவும் கொள்ளலாம். என்றிரேல் பொற்குன்றும் மணிக்குன்றும் நெடிது நிற்கின்ற போலும் என்று கூட்டுக. நெடிது-உயரமாக. நீண்ட காலம் என்றும் கொள்ளலாம்.]

அற்புதத் திருவந்தாதியில் உள்ள 83-ஆவது பாட்டு இது.

பரமஹம்ச உபநிஷதம்

'அண்ணா' சுப்ரமண்யம்

பரமஹம்ஸ உபநிஷதம் சுக்ல யஜுர்வேதத்தைச் சேர்ந்ததாகும். அதன் சாரம் வருமாறு:—

1. நாரதர் பகவானிடம், "பரமஹம்ஸர்களாகிய யோகிகளின் மார்க்கம் என்ன? கதி என்ன?" என்று வினவினார்.

அவருக்குப் பகவான் கூறியது:— பரமஹம்ஸ மார்க்கம் உலகில் அடைவதற்கு மிகவும் அரிது. பரவலாக இல்லாமல் எங்கோ ஒரு பரமஹம்ஸர் இருப்பார். அவர் என்றும் புனிதமானவர். அவரே மகாபுருஷர். அவருடைய மனம் எப்போதும் என்னிடமே லயித்திருக்கும். நானும் அவரிடம் நிலைத்திருப்பேன். அவர் தமது மகன், நண்பர், மனைவி, உறவினர் ஆகியோரைத் துறந்து, சிகை பூணூல் ஆகியவற்றைக் களைந்து, எல்லாக் கர்மங்களையும், வேதம் ஓதுவதையும் கூட விட்டு, இந்தப் பிரம்மாண்டமாகிய உலகத்தையே துறந்து, உடலின் உபயோகத்திற்காகவும் உலகின் நன்மைக்காகவும், துணியும் ஒரு தடியும் மட்டும் வைத்துக்கொள்வார். அதுவும்கூட முக்கியமன்று. எது முக்கியமென்றால் இனிக் கூறுவோம்.

2. தடியுமன்று, சிகையுமன்று, பூணூலுமன்று; துணியும்கூட இல்லாமல் பரமஹம்ஸர் சஞ்சரிப்பார். அவருக்குக் குளிரும் வெப்பமும் இல்லை. இன்பமும் துன்பமும் இல்லை. மானமும் அவமானமும் இல்லை. தோன்றுதல், வளர்தல், மாறுதல் முதலிய ஆறு வாழ்க்கைநிலைகள் இல்லை. நிந்தை, கர்வம், மாச்சரியம், டம்பம், ஆசை, பொறாமை, அகங்காரம் முதலியவை இல்லாமல் அவர் தமது உடலையும் பிணம் என்று கருதுவார். சந்தேகம், பொய்யறிவு முதலியவற்றிற்கு எந்த உடல் முன்பு காரணமாக இருந்ததோ அந்த உடற்பற்றிலிருந்து அவர் முற்றும் நீங்கியவர். எனவே, 'அந்த அழியாத மெய்யறிவுடன் ஆத்மாவாகிய தன்னிடமே நிலைத்து, அசையாது அமைதியாய் இரண்டற்ற ஆனந்தமாய், அறிவே உருவாய் நான் இருக்கிறேன். அதுவே என் பரமபதம், அதுவே சிகை, அதுவே பூணூல்' என்று பரமஹம்ஸர் நிலை எய்திய ஒருவர் காண்கிறார். 'பரமாத்மாவும் ஆத்மாவும் ஒன்றே' என்ற ஞானத்தால் அவற்றிற்கிடையே அவருக்கு வேற்றுமை அழிந்துவிட்டது. அவ்விதம் வேற்றுமை அழிந்த அந்த நிலையே அவருக்கு ஸந்தியோபாஸனையாக அமைந்துவிடுகிறது.

3. எல்லா ஆசைகளையும் அறவே ஒழித்து, உத்தமமான அத்வைதத்தில் நிலைபெற்று ஞான தண்டத்தைத் தரித்தவர் எவரோ அவரே ஏக தண்டீ என்று சொல்லப்படுவார்.

4. எல்லா இந்திரியங்களின் போக்கையும் அடக்கி எவர் ஆத்மாவிலேயே நிலைபெற்று, பரிபூர்ணானந்தமாகிய ஒரே உணர்வுடையவராய், 'ப்ரஹ்மைவாஹமஸ்மி' என்ற அபரோக்ஷானுபூதியுடையவராய் இருப்பவரோ அவர் கிருதகிருத்யர், வாழ்க்கையின் உன்னதப் பயனை எய்தியவர் என்று பரமஹம்ஸ உபநிஷதம் கூறுகிறது. ※

கண்ணனும் ராதையும்

சரஸ்வதி

ஒரு சமயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், நந்தன் முதலிய கோபர்களைக் கோகுலத்திற்கு அனுப்பி விட்டு ராதையின் இருப்பிடத்தை அடைந்தார். அங்கு ராதை எழில் மிகுந்த தோற்றத்துடன் கம்பீரமாக வீற்றிருந்தாள்.

நித்தமும் இளமைத் தோற்றமுடையவள் ராதை. அவளது முகமோ அன்றலர்ந்த தாமரையை ஒத்திருக்கும். பல வகையான அழகிய ஆடை ஆபரணங்களை அன்று அவள் பூண்டிருந்தாள். அவளைச் சுற்றிக் கோபியர் சூழ்ந்து பணிவிடை செய்துகொண்டிருந்தனர்.



மணம் மிக்க மலர்களாலான பெரிய மாலை அணிந்திருந்த ராதை தொலைவில் கண்ணன் வருவதைக் கண்டுகொண்டாள். உடனே தன் இருக்கையிலிருந்து எழுந்து பக்தியோடு கண்ணனைப் போற்றிச் சிறந்த முறையில் வரவேற்பளித்தாள்.

சிறிது நேரம் சென்றபின் தனிமையில் கண்ணனைச் சந்தித்து, "சுவாமி! தங்களுக்குள் மண்டலங்கள் அடக்கம். எல்லா நன்மைகளுக்கும் மூலகாரணம் தாங்களே. நன்மையும் தாங்களே. அப்படிப்பட்ட தங்களின் க்ஷேமலாபங்களைப்பற்றி விசாரிப்பதில் அர்த்தமில்லைதான். இருந்தபோதிலும் லௌகிக விஷயங்கள் வேதங்களைவிடவும் நடைமுறையில் வலிமையுடையன. எனவே நான் தங்களைக் கேட்கிறேன்: தாங்கள் நலமுடன் இருக்கிறீர்களா? ருக்மிணி, சத்தியபாமா அனைவரும் நலம்தானே?'' என்று வினவினாள்.

ராதையின் இனிமையான வார்த்தைகளினாலும் வரவேற்பினாலும் மிகவும் மகிழ்ந்த கண்ணன் ராதைக்கு எதிரில் அமர்ந்துகொண்டு கூறலானார்—

ராதா! இயற்கையிலேயே நான் எல்லா உலகங்களுக்கும் யஜமானன். பிறகு ருக்மிணி மற்றும் பல பெண்களின் விஷயம் மட்டுமென்ன? காரண காரியங்களுக்காகத் தனித்தனி வடிவத்தோடு காணப்படுகிறேன். நான் சுயமாகவே பிரகாசமுடையவன். அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரே ஆத்மாவாக இருக்கிறேன். புல்லிலிருந்து பிரம்மா வரையிலுமுள்ள அனைத்திலும் வியாபித்திருக்கிறேன். கோகுலத்தில் ஸ்ரீகிருஷ்ணரூபத்திலும் இருக்கிறேன். அழகான கோகுலத்தில் விருந்தாவனத்தில் ராதையின் மணாளனாக இருப்பவனும் நான்தான். அந்தச் சமயத்தில் இரண்டுகைகளோடு ஆயன் போன்று சிறுவனாக தோற்றத்தில் விளையாடுகிறேன். அப்போது ஆயர்களும் ஆய்ச்சியரும் பசுக்களும் சூழச் சுற்றி வருகிறேன்.

வைகுண்டத்தில் நான்கு கைகளுடன் வசிக்கிறேன். அங்கு நான்தான் லட்சுமிபதியாகவும் சரஸ்வதியின் மணாளனாகவும் இருக்கிறேன். அங்கு எப்போதும் சாந்தசொரூபமாக இருக்கிறேன். இவ்வாறு சநாதன பரமேச்வரனாகிய நானே இரண்டு விதங்களில் காட்சி தருகிறேன். ச்வேதத்விபத்திலும் திருப்பாற்கடலிலும் மானஸி, ஸிந்துகன்யா, மர்த்யலட்சுமி ஆகியவர்களின் கணவனும் நானே. அங்கு நான்கு கைகளுடன் காட்சி தருகிறேன்.

நான்தான் நாராயணனாகிய ரிஷி. அதுபோலவே தர்மிஷ்டனாகவும், தர்மத்தைப்பற்றிக்

கூறுபவனுகவும், தர்மவழியை நடத்துபவனுக வும் விளங்கும் நரனும் நான்தான். தர்மிஷ்டை யும் பதிவிரதையுமான சாந்தி, லட்சுமியின் வடி வானவள். இந்தப் புண்ணியபூமியான பாரத தேசத்தில் நான்தான் அவள் கணவன். ஸித்தேச் வரனும், ஸித்தியை அளிப்பவனுமாகிய கபிலன் நான்தான்.

இவ்விதம் பல உருவங்களில் தோற்றமளிக் கிறேன். துவாரகையில் ருக்மிணியின் கணவ னுவேன். திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் நான்தான் சத்தியபாமையின் கணவன். என் மற்ற மனைவிமார்களுடன் தனித்தனி வடிவங் களில் வாழ்கிறேன். நாராயணரிஷியான நான் தான் அர்ஜுனனுக்குச் சாரதியானேன். அர்ஜுனன் நரரிஷி; தர்மத்தின் மகன்; சிறந்த பலசாலி. என் அம்சமாகப் பூலோகத்தில் அவன் பிறந்திருக்கிறுன். புஷ்கர க்ஷேத்திரத்தில் அவனுக்கு நான் சாரதியாக வரவேண்டு மென்று கடுந்தவம் புரிந்தான்.

ராதே! எப்படி நீ கோலோகத்தில் ராதிகா தேவியாக இருக்கிருயோ, அதே போல் கோகு லத்திலும் இருக்கிருய். நீதான் வைகுண்டத் தில் லட்சுமியாகவும் சரஸ்வதியாகவும் இருக் கிருய். திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட திரு மாலின் ஆருயிராக விளங்கும் லட்சுமி சொரூபி யான சாந்திதேவியும் நீயே. பாரதத்தில் கபில முனிவரின் பத்தினியாக விளங்கும் பாரதி என் பவளும் நீயே. நீதான் மிதிலையில் சீதை என்ற பெயருடன் விளங்கினுய். சதி திரௌபதிதேவி உன் நிழல்தான். துவாரகையில் ருக்மிணியுருவத் தில் நீயே இருக்கிருய். பஞ்சபாண்டவர்களின் மனைவியான திரௌபதி உன் கலையினுல் விளங்கு பவள். நீதான் ராமனின் மனைவி. உன்னையே ராவணன் கடத்திச் சென்றுன். நீ எப்படி உன் அம்சத்திலும் கலையிலும் பல வடிவங்களில் விளங்குகிருயோ அதேபோல் நானும் விளங்கு கிறேன். நான்தான் பரமாத்மா. ராதே! இவ்வாறு நான் உனக்கு எல்லா அத்யாத்ம ரகஸ்யத்தையும் கூறிவிட்டேன் என்று கண்ணபிரான் ராதையினிடம் கூறி முடித் தார்.

—பிரம்மவைவர்த்த புராணம்

சுவாமி போதஸ்வரூபானந்தரின் மறைவு

ஸ்ரீமத் சுவாமி போதஸ்வரூபானந்தர் (மாதவன் மகராஜ்) 1981 ஜுலை 4-ஆம் நாள் திருவனந்தபுரத்தில் காலமானுர் என்ற செய்தியை வருத்தத்துடன் அறிவிக்கிருேம்.

சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடம் புத்தக வெளியீட்டுத்துறையின் வளர்ச் சிக்கு அவரது பணி குறிப்பிடத்தக்கதாக விளங்கியது. ஆங்கிலத்தில் வெளி யாகும் 'வேதாந்த கேசரி' என்ற மாத இதழுக்கு முன்பு அவர் ஆசிரியராகப் பணி புரிந்தார். சிறந்த வேதாந்தச் சொற்பொழிவாளராகவும் விளங் கினுர்.

1960-ஆம் ஆண்டு சென்னை மடத்தில் அவர் பிரம்மசாரியாகச் சேர்ந்தார். 1969-ஆம் ஆண்டு அவர் துறவறம் ஏற்றுர்.

சென்னை, டில்லி, திருவனந்தபுரம், கல்கத்தா முதலிய இடங்களிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் கிளைகளில் அவர் பணியாற்றினுர்.

சுவாமி போதஸ்வரூபானந்தர் தமக்கு வழங்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் செயல்திறமை வாய்ந் தவர். 1977-78-ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச வெள்ள நிவாரணப் பணியின் போது அவர் கடுமையாக உழைத்து நிவாரண வேலைகளை மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து கடந்த இரண் டாண்டுகளாக அவருக்கு இருதய சம்பந்தமான (Cardiac involvement) நோய் ஏற்பட்டிருந்தது. அது காரண மாக அவரது உடல் மிகவும் பலவீன மடைந்தது.

மறைந்த ஸ்ரீமத் சுவாமி போதஸ்வ ரூபானந்தரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிருேம்.

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

வைராக்கியம், அகங்காரமின்மை, அன்பு, பக்தி, உயிர்நாடி போன்ற நம்பிக்கை ஆகிய இவை தாம் உண்மையான துறவியின் அடையாளம். துவராடை எவனையும் துறவியாக்கிவிடாது.

கடமைகளைக் கைவிட்ட இல்லறத்தானும், விரதத்தை விட்ட பிரம்மசாரியும், காமத்தால் சலிக்கும் துறவியும் உலகை ஏமாற்றுகிற போலிகள்.

துவராடை துறவுக்கு அடையாளம். மனதில் அமைதியுள்ளவனுக்கு அது ஓர் அணிகலம். மனது காமத்தையும் காஞ்சனத்தையும் பின் பற்றி ஓடினால் துவராடை கேலிக்கிடமாகும்.

மனதையும் இதயத்தையும் துறவு, வைராக்கியம், பக்தி ஆகிய சாயத்தில் தோய்த்துக் கொள். அப்பொழுதுதான் நீ உண்மைத் துறவி ஆவாய்.

சேனாபதி போரில் வெல்லலாம்;

அரசன் நாட்டை அடக்கியாளலாம்;

ஆனால் எவன் தனது மனதை ஆள்பவனோ

அவனே எல்லோரையும்விட மேலானவன்.

உங்கள் மனவெளியில் தீவிர வைராக்கியமாகிய கடுங்காற்று வீசத்தொடங்கினால் ஆசைகளாகிய மரங்கள் வேரற்று விழ்ந்துவிடும். புயல் வீசும்பொழுது பறவைகள் கூடுகளினின்று பறப்பது போல் அகங்காரம், பொறாமை, பகை, சுயநலம் ஆகிய பறவைகள் உன் உள்ளத்திலிருந்து பறந்தோடிப் போய்விடும். புயலுக்குப் பின் அமைதி நிலவுவது போல், உங்கள் வாழ்க்கையில் அப்போது அமைதி நிலவும்.

எப்படி வாழ்ந்தால், மரத்தடியிலோ, வெட்ட வெளியிலோ, எங்கிருந்தாலும் நீங்கள் இருக்கும் இடத்தை நாடிச் சாதகர்கள் வருவார்களோ, ஆசிரமங்கள் தாமே தோன்றுமோ அப்படி வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். சொற்பொழிவுகளால் பயனில்லை; நீங்கள் பேசும் பேச்சுக்களில் உள்ள குறிக்கோள்களை நீங்கள் வாழ்க்கையில் நடத்திக் காட்ட வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் வைராக்கியத்திற்கு இலட்சிய புருஷர். அவரை உங்கள் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளுங்கள்.

தங்க நகை செய்யும் ஆசாரி தங்கத்தை உருக்கும்போது தன் வாய் கை கால் எல்லாவற்றாலும் உழைக்கிறான். காலால் துருத்தியையும் கையால் விசிறியையும் இயக்கிக்கொண்டு வாயால் தியை ஊதவும் செய்கிறான். அதனால் விரைவில் தங்கம் உருகுகிறது. உருகியதும் அதை அச்சில் வார்த்துவிட்டுப் பிறகு புகை பிடித்துக்கொண்டு இளைப்பாறுகிறான். அவ்வாறே நீங்களும் உங்கள் உடல் உள்ளம் மனம் எல்லாவற்றுடனும் கடவுளிடம் பக்தியைப் பயில முயன்று அவனிடத்தில் உங்களை அர்ப்பித்துவிட வேண்டும்.

வைராக்கியம் நிறைந்த துறவு என்ற தீ உங்களிடம் எரிந்துகொண்டே இருக்கட்டும். அதனால் உங்கள் மனம் மாசற்றுப் புதுமையை அடையட்டும். "இவ்வுலகில் எல்லாம் பயத்துடன் கூடியது. துறவு ஒன்றே பயமற்ற நிலை."

வயது முதிர்ந்தபின் மனதை அடக்குவது இயலாது. ஆகையால் இப்பொழுதே சாதனம் பழக வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மனதை ஒரு கடுகுப்பொட்டலத்திற்கு ஒப்பிடுவார். அது அவிழ்ந்து கடுகு இறைந்து போனால் அதை மீண்டும் ஒன்று சேர்ப்பது கடினம். ஒரு வெள்ளைத் துணியில் எந்தச் சாயம் வேண்டுமானாலும் ஏற்றலாம்.

ஆனால் ஏற்கனவே சாயம்பிடித்த துணியில் புதுச் சாயம் ஏற்றுவது கடினம். உலகச் சாயம் ஏறிவிட்ட மனமும் அப்படித்தான்.

இளைஞர்களாகிய உங்கள் மனதில் உலகச் சாயம் ஏறவில்லை. அதனால்தான் உங்களை இப்பொழுதே சாதனம் பழகத் தூண்டுகிறேன். இளமையில் காமம் முதலியவை வலிவுடன் இருந்தாலும், மனம் அவற்றைவிட அதிக வலிவுடையதாகும். ஆகையால் உங்கள் மனதில் பக்திச் சாயத்தை ஏற்றிக்கொள்ளுங்கள்.

இலட்சிய புருஷர்களை உருவாக்கும் நோக்கத்துடன் சுவாமி விவேகானந்தர் இந்த மடத்தை நிறுவினார். இந்தியாவில் ஆசிரமங்களுக்கும் ஆலயங்களுக்கும் குறைவில்லை. ஆயிரக்கணக்கான அவற்றுடன் இன்னொன்றைச் சேர்ப்பது அவருடைய கருத்தன்று. இந்த மடத்தின் நோக்கம் இளைஞர்களின் உள்ளத்தில் துறவு மனப்பான்மையையும், மதவாழ்க்கையில் ஸமரஸ மனப்பான்மையையும் வளர்க்க வேண்டும் என்பதேயாகும். இவ்விடத்திலிருந்து துறவிகள் உலகெங்கும் சென்று இந்த இலட்சியத்தைப் பரப்ப வேண்டும்.

ஏற்கனவே உள்ள மதப்பிரிவுகளுடன் இன்னொரு பிரிவை ஏற்படுத்த ஸ்ரீராமகிருஷ்ணர் வரவில்லை. ஆனால் அவை அனைத்துள்ளும் புத்துயிரையும் புதுவிழிப்பையும் புதிய ஆர்வத்தையும் உண்டாக்கவே அவர் வந்தார்.

சுயநலப் பற்றின்றித் தூய்மையாக வாழும் இளைஞர்களைப் பயில்வித்து, ஸ்ரீகுருதேவரின் ஸமரஸ லட்சியத்தைப் பரப்பவே சுவாமிஜி இந்த மடத்தைத் தோற்றுவித்தார்.

நீங்கள் அந்த இலட்சியத்தால் கவரப்பட்டுத்தான் இங்கு வந்திருக்கிறீர்கள். அதற்கிசைவாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

உங்களிடம் பிரகாசிக்கும் துறவையும் தூய்மையையும் கண்டு எல்லா நாட்டு மக்களும் உங்களை முன்மாதிரியாகக் கருதி வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்வார்கள். துறவுக் கோலம் பூணுவதும், மதநூல்களைப் பாடம் செய்வதும், பல க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதுமே துறவியின் இலட்சியமன்று. ஒரே இடத்தில் இருந்துகொண்டு தீவிரமாகச் சாதனைகளைப் பழகுவது, ஊரூராக ஒரு நோக்கமுமில்லாமல் அலைவதைவிடச் சாலச் சிறந்ததாகும்—முக்கியமாக ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கு.

சாதகன் ஒரே இடத்தில் இருந்துகொண்டு தியானமும் ஜபமும் தவறாமல் ஒழுங்காகப் பழகுதல் வேண்டும். கதையில் கூறிய பறவையைப் போல் அவன் கப்பலின் பாய்மரத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும். ※

தர்மம்

நம்மால் இயன்ற வரையில் பிறருக்குக் கொடுத்து உதவுவது தர்மம்.

பணக்காரனை அணுகிக் கேட்கும் ஏழைக்குக் கொடுக்காவிட்டால், அந்தப் பணக்காரனும் அந்த ஏழையைப் போலவே வறுமைநிலையை அடைவான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

யாசிப்பதற்காக வரும் ஏழை, பள்ளி ஆசிரியரைப் போன்றவன். பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் பெற்றுக்கொண்டு பாடங்களைக் கற்பிக்கிறார்கள். இந்த யாசகன் சம்பளம் இல்லாமலே நாம் இருக்கும் இடத்திற்கு வந்து பாடங்களைக் கற்பிக்கிறான்.

“நான் முற்பிறவியில் பணக்காரனாக இருந்தும் ஒருவருக்கும் ஒன்றும் கொடுத்ததில்லை. அப்படிக் கொடுக்காத காரணத்தினால் இந்தப் பிறவியில் இப்படி ஏழையானேன். நீங்களும் பிறருக்குக் கொடுக்காதவர்களாக இருந்து என்னைப் போலப் பிச்சைக்காரன் ஆகாதீர்கள்” என்பது அவன் கற்பிக்கும் பாடமாகும்.

தீண்டாமையும் ஆலயப் பிரவேசமும்

சுவாமி சித்பவானந்தர்

1947-ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பிப்ரவரி இதழில் வெளிவந்த கட்டுரை இது.

தீண்டாமை என்ற பழக்கம் நாகரிகம் வாய்ந்த எல்லா நாடுகளிலும் உண்டு. ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு விதத்தில் அதைக் கையாண்டு வருகிறது. சிலர் அதில் அளவுக்கு மீறிக் கருத்துச் செலுத்துகின்றனர். வேறு சிலர் வாழ்க்கைக்கு அது முக்கியமானதல்ல என்று அதைப் பின்னணியில் வைக்கின்றனர்.

ஹிந்துக்களிடையில் நாளடைவில் தீண்டாமை ஒரு மதச் சடங்காக மாறிவிட்டது. அதனுல் அவர்களுக்கு விளைந்த நன்மையை விடக் கேடே அதிகம். ஹிந்து சமுதாயம் இன்றைக்கு அடைந்துள்ள கீழ்மை அதை நன்கு விளக்குகிறது.



உடல் தூய்மையும், தொழிலும், பழக்க வழக்கங்களும், மனப்பரிபாகமும் தீண்டுதல் அல்லது தீண்டாமைக்குக் காரணங்களாகின்றன.

தீட்டுப்பட்டவர்களைத் தொடலாகாது. தொற்றுநோய் உடையவர்களைப் பொதுவாக யாரும் அணுகலாகாது. நீராடியுள்ளவர் மீது அழுக்குப் படிந்தவர்கள் தோய்வது தகாது.

வாழ்க்கையில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் உடையவர்கள் அவை இல்லாரோடு இணங்கலாகாது. துஷ்ட ஸ்வபாவமுள்ளவர்களை அடிக்கடி தீண்டுகிறவர்களுக்கு, துஷ்ட ஸ்வபாவம் வருகிறது.

இவை யாவும் வாழ்க்கைக்குச் சம்பந்தமான உண்மைகள். ஆகையால் இவற்றை மதக் கோட்பாடுகளாக ஹிந்துக்கள் எடுத்துக்கொண்டனர். ஆனுல் இன்றைக்கு நாம் காணும் தீண்டாமையோ இந்தக் கோட்பாடுகளோடு சம்பந்தப்பட்டதல்ல.

மக்களை நல்வழியில் நடத்துவதற்கு ஹிந்து மதத்தின் தனித்திட்டம் ஒன்று உண்டு. ஆத்ம பரிபாகத்தில் மேன்மையடைந்துள்ளவர்கள் மற்றவர்களையும் மேல்நிலைக்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றனர். கீழோரை மேலோராக்குமளவு அவர்களது மேன்மை காப்பாற்றப்படுகிறது.

மனிதன் பிறருக்கு எதை வழங்குகிறுனே அது அவனுடையதாகிறது. பெருமையும் சிறுமையும் தான் தர வருமே.

பாமரர்க்கிடையில் கடவுளைப் பற்றிய அறிவைப் புகட்டுவதற்குப் பல சீரிய முறைகளை ஹிந்துமதம் கைக்கொண்டு வந்திருக்கிறது. அவற்றுள் ஆலய வழிபாடு முக்கியமானது.

தேசப் படத்தைக் கொண்டு ஒரு தேசத்தின் அமைப்பு நன்கு விளக்கப்படுகிறது. அதைவிட நன்ருக ஆலயத்தின் வாயிலாகக் கடவுள் தத்துவம் புகட்டப்படுகிறது.

மக்கள் ஏராளமாகத் திருவிழாக்களில் திரள்கின்றனர். வேடிக்கைகள் பல பார்ப்பதற்கிடையில் ஆலயத்தையும் அவர்கள் சுற்றிப்

பார்க்கின்றனர். அவர்களின் மனதைக் கவர வல்ல சிலைகளும் சிற்பங்களும் கூடங்களும் அங்கு அமைந்துள்ளன. சிலைகளோ கதைகள் பலவற்றைப் பேசாது புகட்டுகின்றன. கதைக ளிலிருந்து நல்ல கருத்துக்கள் மனதில் படிகின்றன. கருத்துக்கள் கடவுள் பக்தியூட்டு கின்றன. பிறகு வழிபாடு தானாக வந்தமை கிறது.

இப்படி இயல்பாக எளிதாக நல்ல மாறு தல்கள் மக்களிடத்தில் ஆலயத்தின் வாயிலாக உண்டாகின்றன. ஆனால் தீண்டத்தகாதவர் என்ற ஒரு கூட்டத்தாருக்கு இந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆலயங்களுள் செல்ல அவர் களுக்கு உரிமை இல்லை. அதனால் மேலான எண்ணங்களும் கருத்துக்களும் அவர்களுக்கு எட்டுவதில்லை.

பள்ளிக்கூடத்துக்குள் அனுமதிக்கப்படாத குழந்தைகள் கல்விக்குப் புறம்பாக இருக்கி றார்கள்; ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படாத பாமரர்கள் ஆசாரத்துக்கும் நல்ல வாழ்க் கைக்கும் புறம்பாகி விடுகிறார்கள். அப்படி அவர்கள் அடைந்துள்ள கீழ்மைக்கு மேன் மக்களே பொறுப்பாளியாகிறார்கள்.

ஆலய வழிபாடு அறிவுடையோர்க்கு முற்றி லும் தேவையானதல்ல. அவர்களுக்குத் தங்கள் உள்ளமே பெருங்கோயில்.

உள்ளத்தில் இறைவனது சாந்நித்யத்தை உணராதவர்கள் அவனை வேறு எங்கும் காண மாட்டார்கள். பண்படாத பாமரர்களுக்கோ பெரிய கோவில்களும், ஆடம்பரமான ஆரா தனைகளும், கண்ணைக் கவருகிற அலங்காரங் களும், மனதைப் பற்றிப் பிடிக்கிற மணி யோசையும், மேளதாளமும் வேண்டும். அப்படியெல்லாம் செய்தால்தான் அவர்களுக் குத் தெய்வசிந்தனை சிறிது வருகிறது. இவற்றை யெல்லாம் தங்களுடைய தனியுடைமை என்று அறிவாளிகள் இயம்புவது தகாது.

வைத்தியசாலைகள் அமைவதெல்லாம் நோயாளிகளுக்கென்றே. ஆரோக்கியமுடைய வர்கள் அங்கே உழைக்கலாம்; பொதுநலச் சேவை செய்யலாம். வைத்தியசாலை தங்களுக் குச் சொந்தம் என்று நோயாளிகளை உள்ளே

திருப்தி இயற்கையான செல்வம். சொகுசான வாழ்வு செயற்கையான வறுமை. —சாக்கரட்டீஸ்

சோம்பேறித் தனம் மனிதர்களின் வேகத்தில் இருக்கும் பெரிய பகைவன். உழைப்புக்கு நிகரான உறவினன் வேறு இல்லை. —ஒரு சுலோகம்

பிற மாதர்களை அன்னை போலவும் பிறர் செல்வத்தைக் கல் போலவும் எல்லா ஜீவன் களிலும் தன்னையே எவன் காண்கிறானோ அவன்தான் பண்டிதன், படித்தவன், பண்புடையவன். —ஒரு சுலோகம்

நுழைய வொட்டாமல் தடுப்பது தகாது. வெளியே விலக்கி வைத்தால் நோயாளி நோயாளியாகவே இருப்பான்.

இந்தக் கோட்பாடு ஆலயங்களுக்கும் பொருந் தும். பாமரர்களுடைய வாழ்க்கையை ஆலய வழிபாடு பண்படுத்துகிறது. ஆலயத்துக்குள் செல்ல வேண்டாமென்று அவர்களைத் தடுப் பதற்குப் பதிலாக, ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று அவர்களுக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும். உடல்சுத்தமும் உள்ளத்தின் பரிபாக மும் அதைத் தொடர்ந்து தாமாக வந்துவிடு கின்றன. தன்னையறியாமல் குழந்தை வளர்வது போலவே, தங்களையறியாமல் அவர்கள் சீர்திருந்துகின்றனர். ஜாதியில் மேலோராக இருப்பவர் மனப்பாங்கிலும் மேலோராகி விடுவார்களானால் ஆலய வழிபாட்டின் மூல மாகத் தீண்டாமை என்ற நோயைச் சமூகத்தி னிடமிருந்து அவர்கள் அறவே நீக்கிவிடலாம்.

இன்று ஹிந்துக்களிடம் நாம் காணும் தீண் டாமை, ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டதுமல்ல; ஆத்மசாதனத்தை அடிப் படையாகக் கொண்டதுமல்ல. அது அறி யாமையில் உதித்துள்ளது. கல்நெஞ்சம் என்ற வேலிகட்டி அது வளர்க்கப்படுகிறது. 'நம்மைத் தவிர ஈசுவர சிருஷ்டியிலுள்ள மற்ற எல்லாரும் தீண்டத் தகாதவர்கள்' என்ற எண்ணமே மதத்தின் பெயரால் எங்கும் தாண்டவமாடு

கிறது. இந்த நோயைத் தவிர்க்குமளவிற்குச் சமுதாயத்தில் நல்வாழ்வு மலர வேண்டும்.

நலம், கேடு என்ற இரண்டு சக்திகள் இயற்கையில் வேலை செய்து கொண்டிருக்கின்றன. தன்னை ஆஸ்திகன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவனுக்கு மக்களின் நலத்தில் நம்பிக்கை குறைந்துவிட்டது. கேட்டையே எல்லாவற்றிலும் வல்லதாக அவன் நினைக்கிறான். தன்னிடத்திலுள்ள புனிதம் உலகெங்கும் பரவும் என்ற நம்பிக்கை அவனிடம் இல்லை. உலகெங்குமுள்ள கேடும் திங்கும் தீட்டும் தன்னை வந்து கெடுத்துவிடும் என்ற அச்சம் எப்பொழுதும் அவனது உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. இத்தகைய அச்சத்திலே அல்லும் பகலும் அழுந்திக் கிடக்கிற ஒருவனிடத்தில் மேன்மையை எப்படி எதிர்பார்க்க முடியும்?

கீழ்மக்கள் பிரவேசித்தால் கோவிலுக்குக் கேடு வரும் என்று எண்ணுகிறவர்கள் கடவுளுடைய பரிசுத்தத்தன்மையில் நம்பிக்கை வைக்காதவர்களாகிறார்கள். கங்கைநதிக்குள் யார் வேண்டுமானாலும் பிரவேசித்து நீராடலாம். அழுக்குப் படிந்தவனுக்கு அழுக்குப் போகிறது. ஆயிரக்கணக்கான பாவிகள் வந்து குளித்தாலும் கங்கையின் மகத்துவம் குறைவதில்லை. சாக்கடைகள் பல அதில் பிரவேசித்தாலும் அதன் புனிதம் குறையவில்லை. கங்கையில் சேருகிற சாக்கடையும் கங்கையாக மாறுகிறது. ஆகையினால்தான் கங்கைநதி புண்ணிய நதி என்று புகழ்பெறுகிறது.

அழுக்கையெல்லாம் ஏற்று அமலமாக்குவது அதனுடைய புண்ணியச் செயல். மனிதன் தொட்டு அது கெட்டுப் போய்விடுமானால் அது புண்ணிய நதியாகாது. இத்தகைய கங்கை கடவுளிடத்திலிருந்து வருகிறது என்பது ஐதிகம். கடவுள் என்பதும் புனிதம் என்பதும் ஒன்று. புனிதத்தை இழக்கும் கடவுள் கடவுளல்ல. தன் வல்லமையை இழக்கும் கடவுள் சர்வசக்திமான் அல்ல.

இனி, மதப் பற்றுடையவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கோவிலில் சர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்றிவைக்கும் கடவுள் எத்தகையவர் என்பதை ஆராய்வோம்.

'உள்ளன்பே வடிவெடுத்திருந்தாலும் ஒரு கூட்டத்தார் கோவிலுக்குள் கால் வைத்தால் கருணாகரக் கடவுள் அவ்விடத்தை விட்டு விலகி விடுகிறார். மற்றொரு கூட்டத்தார் கண்ணுக்குத் தென்பட்டால் கடவுள் மாயமாய் மறைந்து போய்விடுகிறார். இன்னொரு இனத்தார் அருகில் வந்தால் அவர் அந்தர்த்தானமாகிவிடுகிறார்' என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருப்பவர்களும், அந்த எண்ணத்திற்கேற்ப ஆலய விதிகளை அமைத்திருப்பவர்களும் கடவுளை ஓர் அற்ப வஸ்துவாக்கிவிட்டார்கள். மனிதனைக் கண்டு அஞ்சி ஓடும் பொருள் கடவுளாகுமா? அத்தகைய பொருளை வணங்குவதனால் வரும் பயன் யாது? ஆஸ்திகம் என்கிற பெயரால் மனிதன் கடவுளை இத்தகைய பரிதாபகரமான நிலைக்குக் கொண்டுவந்து விட்டான். ஆலய சம்ரக்ஷணை என்கிற பெயர் வைத்துக்கொண்டு இன்று மனிதன் கையாளும் பழக்க வழக்கங்கள் சமயக் கோட்பாடுகளுமல்ல; அறநெறியுமல்ல; அன்புமல்ல; மனுஷத்தன்மையுமல்ல.

எல்லாம் வல்ல கடவுள், கருணாகரக் கடவுள், அகிலாண்டத்தில் எல்லா உயிர்க்கும் உயிராக இருக்கும் கடவுள் இவர்களின் கையில் ஒன்றுக்கும் உதவாத பொம்மையாகிவிட்டார். இங்ஙனம் கடவுளுடைய புனிதத்தையும் சக்தியையும் தாழ்த்திய மனிதர் தாமே தாழ்வடைந்தனர்.

எந்தச் செயலைச் செய்தால் மனிதன் படிப்படியாகச் சீரும் சிறப்பும் அடைகிறானோ அது தர்மம். நல்வினை என்பதும் அதுவே. வினை ஒன்று இருக்கப் பயன் வேறு ஒன்று ஆகாது. நல்வினை நன்மை பயக்கிறது. தீவினை கேடு விளைவிக்கிறது. இந்த விதி எக்காலத்துக்கும் எல்லாருக்கும் பொதுவானது. ஆகையினால் தர்மம் சநாதனமானது என்கிறோம்.


இப்பொழுது பழக்கத்திலிருக்கும் தீண்டாமையைச் சிலர் சநாதன தர்மம் என்று நினைக்கின்றனர். ஆனால் இது ஒருநாளும் தர்மம் ஆகாது. தீண்டாமை என்பது ஹிந்துசமூகத்தில் இடைக்காலத்தில் வந்துள்ள ஒரு நோய். சில நூற்றாண்டுகளாக அதற்கு அவர்கள் கட்டுப்பாடு என்ற பத்தியம் வைத்திருந்தார்கள். இன்று அந்த நோய் பெரிதும் குறைந்துவிட்டது,

அதற்கு ஏற்றபடி பத்தியமும் தளர்த்தப்பட்டு வருகிறது. ரெயில், மோட்டார் முதலிய பிரயாணச் சாதனங்களில் தீண்டாமை ஒழிந்து விட்டது.

அரசாங்கத்தின் உதவிபெறும் பள்ளிக்கூடங்களில் தீண்டாமை இருக்க இடமில்லை. நவீன வாழ்க்கைமுறையில் தீராத தீண்டாமைநோய் தீர்ந்துவருகிறது. ஆனால் அகிலாண்டத்தையும் படைத்த கடவுளுடைய கோவிலில் மட்டும் அந்த நோய் இன்னும் தீர்ந்தபாடில்லை. கடவுள் மட்டும் அந்த நோயில் இன்னும் வருந்துகிறார் போலும்! உண்மையை ஆராயுமிடத்து, கடவுளின் பெயரால் மனிதன் தனக்குத்தானே உண்டுபண்ணிக்கொண்ட நோய் இது. அழுக்குப் படிந்துவிட்டதென்று தாய் தன் குழந்தையைப் புறக்கணித்துவிட மாட்டாள். அருள் பழுத் தொழுகும் அன்புக் கடவுள் தமது படைப்பின் ஒரு சிறு பகுதியைத் தமக்கு உரியதல்ல என்று புறக்கணிக்கமாட்டார்.

தெய்வத்தின் பெயரால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள இத்தகைய சீர்கேட்டுக்கிடையில், ஹிந்துமதத்தின் சிறந்த லட்சியம் ஏதோ சில இடங்களில் சாசுவதமாக நன்கு காப்பாற்றி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நாற்றிசையிலும் நான்கு பெரிய ஸ்தலங்கள் இருக்கின்றன. கிழக்கே புரி, தெற்கே ராமேசுவரம், மேற்கே துவாரகை, வடக்கே பதரிகாச்ரமம். இவற்றுக்குச் சதுர் தாமம் என்று பெயர். புரியில் எழுந்தருளியுள்ள தெய்வத்துக்கு ஜகந்நாதன் என்று திருநாமம்; உலகுக்கெல்லாம் தலைவன் என்று பொருள். பெயருக்குப் பொருத்தமான வழிபாடு அங்கு நடைபெறுகிறது. கடலை நோக்கி நதிகளெல்லாம் ஓடிக்கொண்டிருப்பது போல, அல்லும் பகலும் அன்பர் அங்கு வந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கிடையில் ஜாதி வித்தியாசம் கிடையாது. ஆலய நிர்வாகிகளும் அதைப்பற்றி நினைப்பதில்லை. மடைப்பள்ளியில் அமுது சமைப்பவர்கள் குலத்தில் கீழ்மக்கள். அதை ஜகந்நாத சுவாமிக்குப் படைப்பவர்கள் பிராம்மணர். பிறகு அந்த உணவு மகாப் பிரசாதம் என்ற பெயர் பெறுகிறது. பக்தி விசுவாசத்துடன் எல்லோரும் அதை ஏற்றுக்



கொள்கின்றனர். மக்களுக்கிடையில் வேற்றுமை பாராட்டாத ஜகந்நாதபுரியில் பேரருள் பூரித்துக்கொண்டிருக்கிறது. இறைவனின் அருளுக்கு அது உறைவிடம் என்பது அங்கே செல்பவர்களுக்கெல்லாம் தெளிவாக விளங்குகிறது.

இந்தியா முழுவதற்கும் நடுநாயகமாக இயங்கும் காசிக்ஷேத்திரமும் ஹிந்து மதத்தின் மேலான லட்சியத்தை நன்கு விளக்குகிறது. அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரையில் காசி விச்வநாதர் கோவிலுக்குள் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து போய்க்கொண்டே இருக்கின்றனர். இந்தியா முழுவதும் காசியை நோக்கிப் போகிறது. இங்கே ஆலயத்துக்குள் ஜாதிபேதம் கிடையாது. சிவபூஜைக்குத் தகுதியுடையவர் யார், தகுதியற்றவர் யார் என்ற கேள்வியும் எழுவதில்லை. தென்னிந்தியாவில் ஆலயப் பிரவேசத்திற்குத் தகுதியற்றவர் என்று மனிதன் மதிப்பிடும் மக்கள் அங்கு நாள்தோறும் சிவலிங்கத்துக்குத் தம் கைப்படப் பூஜை பண்ணி வருகின்றனர். அதனால் ஆலயத்தின் பெருமைக்கு ஒருகுறையும் வந்துவிடவில்லை. பாவிகளையும் புனிதப் படுத்தும் சிவசொரூபமாகவே காசிக்ஷேத்திரம் எந்நாளும் இருந்துவருகிறது.

நான்கு தாமங்களில் ஒன்றாகிய பதரிகாச்ரமம் இமயமலையில் உட்புறத்தில் சுமார் இருநூறு மைல் தூரத்தில் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் கேதாரநாதம் என்ற சிவ க்ஷேத்திரமும் உண்டு.

ஹிந்துக்கள் எல்லோருக்கும் இவை மிகமிக முக்கியமான கோவில்களாகின்றன. ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கே

யாத்திரை போகின்றனர். தேசாசாரம், ஜாதி, மதம் மொழி, உடை, ஒழுக்கம் ஆகியவற்றில் வேண்டியவாறு வேற்றுமைகளை அங்கே செல்லு பவர்களுக்கிடையில் காணலாம். ஆனால் அந்த வேற்றுமைகளைப் பற்றி எண்ணுவோர் பேசுவோர் எவருமில்லை. எல்லாம் இறைவனது எண்ணத்தில் ஒன்றுபட்டு விடுகின்றன. அவ்வளவு தூரம் நடந்து வந்த ஆடவர் மகளிர் எல்லாரும் பாததூளியோடு பதரி கோவிலுக்குள் பிரவேசிக்கலாம். பதரிநாரா யணன் முன்னிலையில் வழிபடுபவர்களுக் கிடையில் எந்த விதமான வேற்றுமைக்கும் இடமில்லை. வேற்றுமைகளெல்லாம் வழியி லேயே மறைந்துபோய்விடுகின்றன. உண்மை யான ஹிந்து மதம் தருகிற காட்சி இதுவே. திருக்கேதாரத்தில் இந்தக் காட்சி இன்னும் ஒருபடி மேலே போகிறது. அங்கே சிவலிங் கத்தை அவரவரே அர்ச்சிப்பது மட்டுமல்ல; வேண்டியவர் அந்தச் சிவசின்னத்தைக் கட்டித் தழுவிக்கொள்ளலாம்.

அவரவர் விருப்பப்படி ஆண்டவனை வழி படுவதே இங்கு ஏற்பட்டுள்ள விதி. இந்த வழிபாட்டுக்கு யாரும் இடைஞ்சல் பண்ண லாகாது. சிவனுக்கும் சிவபக்தனுக்கும் இடையில் இடைஞ்சலாக நின்று தடுப்பது பாவம். தான் ஒதுங்கி நின்று மற்றவர் பண்ணும் சிவபூஜைக்குத் துணை புரிவது புண்ணியம். இதுவே ஹிந்துமதம் மானுட வர்க்கம் முழுவதற்கும் அளித்துள்ள மிக மிக மேலான லட்சியம். இந்தச் சிறந்த லட்சியம் இன்று இமயமலையின் உச்சியில் மறைந்து கிடக்கிறது. இது போதாது; இந்தியா முழு வதும் இது பரவ வேண்டும். பிற நாடுகளுக்கும் இது எடுத்துச் சொல்லப்பட வேண்டும். ஆண்டவன் பெயரால் மக்களைச் சிறுமைப் படுத்துதல் என்கிற அபராதம் செய்கிறவர்கள் இந்தப் பேருண்மையை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாக. அவர்களின் உள்ளத்தில் உண்மை ஞானம் உதிக்க, அன்பு ஊற்றெடுக்க ஆண்டவன் அருள்புரிவாராக. ●



தீண்டாமையும் தொழுகுலமும்

— பி. ஸ்ரீ. —

திருப்பாணர் கதையில் தீண்டாமையின் இன்னல்களைக் காண்கிறோம். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் கதையிலும் தீண்டாதார் துயரத்தைக் காணலாம். யாழ்ப்பாணரும் கோயிலுக்குள் பிரவேசம் இன்றி வெளியே நின்று இசைத் தொண்டு புரிந்தவரே.

'பாட்டுக்கு உருகும் தமிழ்ச் சொக்கன்' என்று சொல்லப்படும் மதுரைச் சொக்கநாதர், யாழ்ப்பாணரின் இசைக்கு உருகித் தொண்டர்களின் கனவிலே தோன்றி, அவரைச் சந்நிதிக்கு அழைத்து வருமாறு பணித்தாராம். திருவாரூர்ப் பெருமானும் யாழ்ப்பாணர், தம்மை நேரே தரிசிக்குமாறு வடதிசையில் ஒரு வாசலை வகுத்தருளினாராம்.

இன்று இரவு தங்குவதற்கு யாழ்ப்பாணருக்கு ஓர் இடம் கொடுக்க வேண்டும் என்று சம்பந்தர் சொன்னதும் திருநீலநக்கர் என்ற மறையவர் நடுமனையில் இடங்கொடுத்தார். பெரிய புராணத்தில் காணப்படும் இந்தச் செய்திகளிலிருந்தே திருஞானசம்பந்தர் காலத்திலும் தீண்டாமையின் இன்னல் நாட்டிலே காணப்பட்டது எனலாம்.

திருப்பாணர் காலத்திலும் நந்தனார் காலத்திலும், தீண்டாமையின் இன்னல் அதிக அளவில் இருந்ததாக ஊகிக்கலாம். 'விலகிப் போ' என்ற கூச்சல் இட்டும் கற்களை எறிந்தும் திருப்பாணரைத் துரத்த முயன்றதாக வரும் கதைப் பகுதி அக்காலத்தில் தீண்டாதார் நிலையைக் காட்டுகிறது.

ஆனால் நந்தனார் கதையில் தீக்குளித்து நந்தமா முனியாகி நடராஜப் பெருமானை அடைந்த நிகழ்ச்சி கூறப்படுகிறது. திருப்பாணரோ லோக சாரங்க முனிவரின் தோளில் தம் திருமேனியுடன் சென்று பேறு பெற்றவர்!

தீண்டாமை கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த காலத்திலே தொழுகுலம் தொண்டர் குலமே என்பதை மெய்ப்பித்தவர்களில் திருப்பாணருக்கு ஒரு சிறப்பான ஸ்தானம் உரியது. இது பாணர் கதையின் படிப்பினை.

卐

மாறிய அமாவாசை

டி. வி. கல்யாணசுந்தரம்

கிருஷ்ண பரமாத்மா, சகதேவன் தன்னிலும் ஒரு படி மேலே என்று உணர்த்த எண்ணி, பாரதப் போர் தொடங்கிய காலகட்டத்தில் ஒரு காட்சியை உண்டாக்கி நடத்தினர். பாரத யுத்தம் நடத்த வேண்டுமா, வேண்டாமா என்ற சர்ச்சையை எழுப்பினர். சர்ச்சையின் துவக்கத்தின்போதே, முழு எதிர்காலத்தையும் தனக்கு இயல்பான யோகநிலையால் கண்ட சகதேவன், "இந்தக் கேள்வி அவசியம்தானா, கண்ணா? நீ நினைத்திருப்பதை நடத்தப்போகிறாய். அதன் பழி, உன் கேள்விக்குப் பதில் சொல்வதன் மூலம் எங்கள் மீது விழ வேண்டுமா?" என்று கூறி, அந்த விவாதத்தை முடிக்கப் பார்த்தான். ஆனால் கண்ணனே சகதேவனை அடக்கிவிட்டுத் தம் கேள்விக்குப் பதில் சொல்லும்படி அனைவரையும் பணித்தார். சகதேவனைத் தவிர மற்றவர்கள் யுத்தம் நடத்தியே தீர வேண்டும் என்றனர். கண்ணன் சகதேவனின் பதிலைத் தூண்டினர்.

சகதேவன் பொறுமையுடன் புன்னகை பூத்தவாறே,யுத்தம் நடவாமலிருக்கத் தம் சகோதரர்களுக்கும் திரௌபதிக்கும் என்ன என்ன நிலை தரவேண்டும் என்று விவரித்துவிட்டு, முடிவாக, "கண்ணா! உன்னையும் கட்டிப்போட வேண்டும்" என்றான்.

உடனே கண்ணபிரான் அதே புன்னகையோடு, "என்னைக் கட்ட இங்கு யாரேனும் வல்லவர் உண்டா?" என்று கேட்டார்.

அர்ஜுனன் தன்னால் முடியும் என்று முன்வந்து, கண்ணனைச் சுற்றி அம்புவலையைப் பின்னினன். பின்னி முடிந்ததும், கண்ணன் சர்வ சாதாரணமாக வெளிவந்து நின்றார். மேலும் பலமுறை விடாமுயற்சியோடு அம்புவலைகளைப் பின்னிக் களைத்து விழுந்தான் அர்ஜுனன்.

அடுத்தபடியாக பீமன் தன் மானசிகமான பூஜாவழியால் கண்ணனைக் கட்டினன். மற்றொரு கண்ணன்தோன்றினர். அவரையும் பீமன் அதே முறையில் கட்டினன். மேலும் மேலும்



கண்ணனது வடிவங்கள் தோன்றியவாறு இருக்கப் பீமனும் பின்னடைந்தான்.

முடிவாகக் கண்ணன், "சகதேவா, உன் செய்தி என்ன?" என்று குறும்புப் புன்னகையுடன் கேட்க, "சித்தமாயிருக்கிறேன்" என அவன் பதிலிறுத்தான். "சரி, ஆகட்டும்" என்று தயாராய் நின்றார் கண்ணன். சகதேவன் ஒரே நொடியில் சமாதியோகத்தில் ஆழ்ந்து, தன்னைத் தானே கட்டிக்கொண்டான். கண்ணன் கதறினர், "போதும், சகதேவா! நீ என்னை கட்டிவிட்டாய், விட்டுவிடு" என்று. சகதேவன் சமாதியைக் கலைத்து எழுந்தான்.

அஞ்ஞான அவஸ்தையிலிருந்து விடுபட்டிராத அர்ஜுனனும் பீமனும் கண்ணனைத் தம்மிலிருந்துவேறாக நினைத்துத் தமது பராக்கிரமத்தால் கட்டிவிடலாம் என்று தமது திறமையில் நம்பிக்கை வைத்து இயங்கினர். அவர்களால் வெற்றிபெற இயலாமற்போயிற்று.

சகதேவனே, அஞ்ஞான அவஸ்தையிலிருந்து விடுபட்டுத் தன்னை உணர்ந்த பூரணஞானியான

தால், தனக்கு அன்னியமாகக் கண்ணனை உணர வில்லை; கட்ட முடிந்தது.

சகதேவனின் நிகரற்ற தன்மை வெளிப்பட, கண்ணபிரான் இன்னுமோர் காட்சியை அரங் கேற்றினர்.

சகலகலா வல்லவனும் பூரணஞானியுமான சகதேவனிடம் சோதிடரீதியில், பாரதப் போரைத் துவக்கித் தான் வெற்றிபெற ஒரு நன்னுளைக் குறித்துத் தரும்படி துரியோதனன் வந்து பிரார்த்தித்தான். தன்னிடம் பிரகாசிக் கும் எந்த வித்தையின் பயனையும் யாசிப் பவனுக்குத் தயங்காமல் உதவ வேண்டும் என்பதுதான் தர்மம் என உணர்ந்திருந்த சக தேவன், சிறிதும் யோசனை செய்யாமல் உடனே துரியோதனனுக்குச் சாதகமான நாளாக அடுத்து வரப்போகும் அமாவாசைத் தினத் தைக் கணித்துக் கொடுத்தான். துரியோதனன் மகிழ்ச்சியோடு போய்ச் சேர்ந்தான்.

குறித்துக் கொடுத்த நாளில் போர் தொடங்க ஆயத்தங்கள் செய்யலானுன் துரியோதனன். பார்த்தார் கண்ணன், 'இதென்ன! சகதேவன் வம்பில் மாட்டி வைத்துவிட்டானே! பாண்ட வர்க்கு வெற்றி தேடித்தர வேண்டிய பொறுப் பில் நாம் இருக்க, சகதேவன் குறிப்பிட்ட நாளில் போர் துவங்குமானல் துரியோதன் அல்லவோ வெற்றி பெறுவான்? இதற்கு ஒரு மாற்றுச் செய்தாக வேண்டுமே!' எனச் சிந்தித்துக் கண்ணன் ஓர் உபாயத்தைக் கையாண்டார். அமாவாசைக்கு முதல் நாளே பாண்டவரை அழைத்துக்கொண்டு ஜலக்கரைக்குச் சென்று பித்ருக்களுக்குச் சேர வேண்டிய அமாவாசைத் தர்ப்பணத்தைச் செய்யலானுர்.

வானிலிருந்து இதைக் கண்ணுற்ற சூரியனும் சந்திரனும் 'இது என்ன கோலம்!' என்று குழப் பமுற்றுக் கண்ணனிடம் வந்து, "நாளையல்லவா அமாவாசை? இன்று தர்ப்பணம் செய்கிறீர் களே?" என்று கேட்டனர். அதற்குக் கண்ணன் அருகே இருந்த போதாயனரை விளக்கம் கேட்டுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்.

சந்திர சூரியர் போதாயனரை அணுகி விளக்கம் கேட்டதற்கு, அவர் எதிர்க் கேள்வி கேட்டார், "அமாவாசையன்று நீங்கள் இரு வரும் எங்கிருப்பீர்கள்?" என்று. "ஏன்? அருகருகே ஒன்றுசேர்ந்திருப்போம்" என்றனர் சந்திரசூரியர்.

"இப்போது ஒன்றுசேர்ந்துதானே வந்திருக் கிறீர்கள்? இப்போதுதான் அமாவாசை" எனச் சொல்லிவிட்டார் போதாயனர். வேறு வழியின்றிச் சந்திர சூரியர் இருவரும் திரும்பிச் சென்றனர். இதிலிருந்துதான் போதாயன அமாவாசை வழக்கில் வந்தது.

இந்தச் சம்பவத்தை அறிந்த துரியோதனன் அவசரப்பட்டு, சகதேவன் குறிப்பிட்டுத் தந்தி ருந்த நாளைக்கு முந்திய நாளே அமாவாசை எனக் கருதிப் போர் தொடர்ந்தான். பாண்ட வரே வெற்றி கொண்டனர்.

சகதேவன் குறித்திருந்த மறுநாளில் துரியோ தனன் போர் தொடங்கியிருந்தால் சரித்திரமே மாறியிருக்கும். 'மறுபடியும் சகதேவனைக் கலந்தாலோசித்த பின்பு போர் தொடங்கு வோம்' என அறிவுபூர்வமாகச் சிந்திக்க வொட்டாமல் துரியோதனனை அவசரபுத்தியில் இயங்க வைத்ததுதான் ஈசுவர சங்கற்பத்தின் ஆற்றல், மகாமாயையின் மறைப்பு.

தன்னைத் தோல்விக்கு ஆளாக்க வேண்டிய நிலையிலுள்ள எதிரிக்கு, தனது பாதிப்பைப் பற்றியே கவலை கொள்ளாமல் இயங்கிய சக தேவனது தர்மம் தவருத நடுநிலையையும் பொறுமையையும் என்னென்று வர்ணிப்பது?

எதிலும் தயை, எப்போதுமே சமநிலை, பதற் றமே இல்லாத பாங்கு, எதிலும் அளவுக்குமீறிய சிந்தனைக்கு இடங்கொடுத்துச் சிதருத திறன், எதையும் ஈசுவர சங்கற்பத்திற்கே விட்டுத் தர்மம் வழுவாமல் இயங்குதல், இயங்கும் போதே 'கிருஷ்ணர்ப்பணம்' என்னும் சீலப் பான்மை இவை யாவும் 'க்ஷமா'நிலைக்கு உரிய லட்சணங்களாகும். ※

கர்வம் முதன்மையான பெரிய பிரபு; நரகத்தின் ஜனதிபதி. —டிபோ

விவேகம் எப்போதும் ஒரு வரப்பிரசாதம். கல்வியறிவு சில சமயம் சாபக்கேடு ஆகிவிடுவதுண்டு. —ஜான்ஷெட்

கடவுளோடு வாழ்ந்தவர்

முதன் முதலாக ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்தித்தபொழுதே ஏதோ ஒரு சக்தி தம்மை அவரிடம் கவர்ந்திருப்பதை அகோரமணி உணர்ந்தார். அவர் மனதில், 'இவர் ஒரு நல்ல மனிதர். உண்மையான சாது. சமயம் கிடைத்தால் மீண்டும் இவரைக் காண வருவேன்' என்ற எண்ணம் தோன்றியது.

அதே போலச் சில நாட்களுக்குப் பின், ஜபம் செய்துகொண்டே இருந்தபொழுது, அகோர மணியின் மனதில் தட்சிணேசுவரம் செல்ல வேண்டும் என்ற ஆவல் தோன்றியது. உடனே இவர் இரண்டு மூன்று பைசாவுக்கு ஸந்தேஷ் (இனிப்புப் பண்டம்) வாங்கிக்கொண்டு தனியாகவே நடந்து தட்சிணேசுவரம் சென்ருர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இவரைக் கண்டதும், "வந்துவிட்டீர்களா? எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்? கொடுங்கள்" என்ருர். அகோர மணியின் மனதிலோ, 'எப்படி இந்த மட்ட மான ஸந்தேஷை வெளியில் காண்பிப்பேன்? இவருக்கு எல்லோரும் எத்தனை நல்ல பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்திருப்பார்கள்! இவரும் சாப்பிட்டிருப்பார். நான் வரும் போதே, நான் கொண்டு வந்திருப்பதைக் கேட்கிருரே' என்று நினைத்தார். மிகவும் வெட்கத்தோடு ஸந்தேஷை எடுத்துக் கொடுத்தார். ஸ்ரீராமகிருஷ்ணரோ வெகு ஆனந்தத்தோடு அதைச் சாப்பிட்டுக்கொண்டே, "எதற்காகப் பணத்தைச் செலவழித்து இந்த ஸந்தேஷை வாங்கி வருகிறீர்கள்? தேங்காய் லட்டு செய்து வையுங்கள். வரும்போது ஒன்ருே இரண்டோ கொண்டு வாருங்கள். இல்லையென்ருல் உங்கள் கையினுலேயே என்ன சமைக்கிறீர்களோ (கூட்டு, கறி முதலியன) அதையே எடுத்து வாருங்கள். உங்கள் கையினுல் சமைத்ததைச் சாப்பிடுவது மிகவும் நல்லது" என்று சொன்னுர்.

'ஆன்மிகம்' பற்றியும் 'நம்முடைய கடமை' என்பதைப் பற்றியுமெல்லாம் பேசாமல், சாப்பிடும் விஷயங்களைப் பற்றிப் பேச்சு எழுவதைப் பார்த்து அகோரமணி, 'நல்ல



சந்நியாசியைப் பார்க்கவென்று வந்தேன். ஆனுல் இவருக்கு எப்போதும் பார்த்தாலும் சாப்பாடு சாப்பாடு சாப்பாடுதான். நானே ஏழைப் பிச்சைக்காரி. இத்தனை உணவுப் பண்டங்கள் எனக்கு எங்கிருந்து கிடைக்கும்? தொலைவிலிருப்பது இருக்கட்டும். இனி நான் வரப்போவதில்லை' என்று எண்ணினுர். ஆனுல் திரும்பிச் சென்றபோது ஏதோ காரணத்தினுல் தட்சிணேசுவரத் தோட்டத்தின் வாயிற் கதவைத் தாண்டிச்செல்ல மனம் வரவேயில்லை. அந்த மனதை மிகுந்த பிரயாசைப்பட்டுக் காமார்ஹாடிக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது.

சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் காமார்ஹாடியிலிருந்து அகோரமணி சச்சடி (ஒருவகைக் கறி) தயாரித்து எடுத்துக்கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்து நின்ருர். அதனை மிக ஆவலுடன் வாங்கிச் சாப்பிட்ட ஸ்ரீராமகிருஷ்ணர், "ஆகா! என்ன ருசி! அமிர்தம் அமிர்தம்!" என்று கூறினுர். அகோரமணிக்கு ஏற்பட்ட ஆனந்தத்தால் கண்களில் நீர் துளித்தது. தான் ஏழை என்பதனுல் ஒரு சாதாரணப் பொருளை இத்தனை உயர்வாக ஸ்ரீராமகிருஷ்ணர் பேசுகிருர் என்ற எண்ணம் ஏற்பட்டது.

மூன்று நான்கு மாதங்கள் இவ்வாறு வருவதும் போவதுமாகக் கழிந்தன. அவரோ எப்போதும்

தின்பது. தின்பது. தின்பதுதான். இதைக் கொண்டுவா; அதைக் கொண்டுவா என்று அவர் கொடுத்த தொல்லையால் செயலற்றுப் போன மூதாட்டி அகோரமணி, 'கோபாலா! உன் நாமத்தைச் சொன்னதில் இதுதானு நடக்கிறது? இதுபோலச் சாப்பாட்டிலேயே ஆர்வமுள்ள சாதுவிடம் கொண்டுவந்து விட்டாயே! இனி நான் வரமாட்டேன்' என்று எண்ணினுர். ஆனல் இது என்ன வலியதோர் ஈர்ப்பு! அவரை நீங்கிப் போனுலும் இழுத்துக் கொண்டு வருகிறதே!

1884-ஆம் வருடம் இளவேனிற் காலம் வந்தது. ஒரு நாள் இரவு மூன்று மணியளவில் ஜபத்திற்கு அமர்ந்த அகோரமணி, ஜபம் முடியும் தறுவாயில் வழக்கமாகச் செய்யும் பிராணுயாமம் செய்தார்.

அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் வலக் கையை மூடிக்கொண்டு முகத்தில் புன்சிரிப்புடன் தம் இடப்புறம் அமர்ந்திருப்பதைக் கண்டார். தட்சிணேசுவரத்தில் பார்த்த பொழுது எவ்வாறு இருந்ததோ அப்படியே அந்தக் காட்சி இருந்தது. அகோரமணி, 'என்ன! இந்தச் சமயத்தில் இவர் எப்படி இங்கு வந்தார்?' என்று எண்ணி வியப்பில் மூழ்கி, மிகுந்த மன உறுதியுடன் தமது இடக்கையால் ஸ்ரீராமகிருஷ்ணரின் இடக்கையைப் பிடித்தார்.

உடனே அந்த உருவம் மறைந்து, அந்த இடத்தில் பத்துமாதக் குழந்தை வடிவத்தில் சத்தியமே வடிவான கோபாலனின் தரிசனம் கிடைத்தது. தவழ்ந்துகொண்டே வந்த கோபாலன் தன் கையைத் தூக்கி மூதாட்டியின் மோவாயைப் பிடித்து "அம்மா! வெண்ணெய் கொடு" என்முன்.

அகோரமணி இதைக் கேட்டுப் பேச்சற்றுப் போனுர். இதென்ன காட்சி! இவர் உரத்த குரலில் அழத் தொடங்கிவிட்டார். "அப்பனே! நான் ஏழைப் பிச்சைக்காரி, நான் உனக்கு எதை உண்ணக் கொடுப்பேன்? எனக்குப் பாலும் வெண்ணெயும் எங்கிருந்து கிடைக்கும்?" என்முர்.

ஆனல் அந்த அற்புதக் கோபாலனே சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. அவனுக்கு வெண்ணெய் தின்றே ஆகவேண்டுமாம்.

பையிலிருந்த தேங்காய் லட்டை எடுத்துக் கொடுத்து. "அப்பா கோபாலா! உனக்கு இந்த வெறுக்கத்தக்க அற்பப் பொருளைக் கொடுக்கிறேன் என்று எனக்கும் அதையே விதித்து விடாதே" என்று கூறினுர்.

அன்று மேலும் ஜபம் நடைபெறவில்லை. கோபாலனின் அற்புத லீலைகள் ஆரம்பித்து விட்டன. மடியில் உட்காருவான்; மாலையைப் பிடித்திழுப்பான்; தோளில் அமருவான்; அறையில் சுற்றிச் சுற்றி ஓடுவான்.

விடியற்காலை முதலே பித்துப் பிடித்தாற் போல இருந்தார் அகோரமணி. அதே நிலையில் தட்சிணேசுவரத்தை அடைந்தார். கோபாலனை மார்போடு அணைத்துக்கொண்டு செல்லும் போது கோபாலனின் சிவந்த சிறு திருவடிகள் அகோரமணியின் நெஞ்சருகே தொங்கிக் கொண்டிருக்கின்றன.

காலை ஏழு மணிக்கு, அகோரமணி 'கோபால், கோபால்' என்று பிதற்றிக் கொண்டே ஸ்ரீராமகிருஷ்ணரின் அறையில் கிழக்குப் பக்கம் உள்ள கதவுமூலமாக நுழைந்தார். கண்கள் மேல்நோக்கிச் செல்கின்றன. முன்ருனை பூமியில் புரளுகிறது. சுற்றுப்புறத்தைப் பற்றிய கவனமே சிறிதளவும் இல்லை. இவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருகே வந்து அமர்ந்தார். பாவநிலையில் மூழ்கிய ஸ்ரீராமகிருஷ்ணர் இவருடைய மடியில் அமர்ந்தார்.

நீர்நிறைந்த கண்களுடன் அகோரமணி தாம் கொணர்ந்த பால், அதன் ஆடை, வெண்ணெய் முதலியவற்றை, கோபால சொரூபரான ஸ்ரீராமகிருஷ்ணரின் வாயில் ஊட்டிவிட்டார்.

சில நிமிஷங்களுக்குப்பின் ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதிநிலை கலந்து தமது கட்டிலில் போய் அமர்ந்தார். கோபாலனின் அன்னையின் பாவநிலை இன்னும் கலையவில்லை. எழுந்து சுற்றிச் சுற்றி ஆடத் தொடங்கிவிட்டார். கூடவே, "பிரம்மா ஆட, விஷ்ணு ஆட, சிவன் ஆட" என்றெல்லாம் பாடவும் தொடங்கினுர்.

காணக் கிடைக்காத இந்தக் காட்சியைக் கண்டு மயங்கி நின்ற வேலைக்காரப் பெண்கள், 'பெண்ணினத்தின் ஸ்பரிசத்தையே சகித்துக் கொள்ள முடியாதவரான ஸ்ரீராமகிருஷ்ணர்

இன்று இவ்வாறு நடந்து கொள்வதற்குக் காரணம் என்ன?' என்று ஆச்சரியப்பட்டனர்.

ஒரு புறம் அறுபத்திரண்டு வயதுக்கும் அதிகமான மூதாட்டியின் இணையற்ற தாயன்பு, இன்னொரு புறம் நாற்பத்தெட்டு வயதானவரின் குழந்தைச் சுபாவம்! தம்மை வென்ற பைரவிப் பிராம்மணியின் யசோதைபாவம் காரணமாக அவருடைய மடியில் ஸ்ரீராமகிருஷ்ணர் வீற்றிருந்ததைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறோம். ஆனால் அதையும் மிஞ்சியது இந்தக் காட்சி; எல்லோரும் பிரத்தியட்சமாகக் கண்டது.

பாவசமாதிநிலை கலைந்தபின் அகோரமணியின் 'ஆனந்த நிலை'யைக் கண்ட ஸ்ரீராமகிருஷ்ணர், அங்கிருந்த மற்ற மாதர்களிடம் சிரித்த முகத்துடன், ''பார் பார், ஆனந்தம் நிரம்பிவிட்டது. அவருடைய மனதோ கோபாலலோகத்திற்கே சென்றுவிட்டது!'' என்று கூறினர்.

பாவநிலையின் உந்துதலினால் அன்று அகோரமணி ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பலவிதமாகப் பேச ஆரம்பித்து விட்டார். ''இதோ பார், கோபாலன் என் மடியில். அவனே உன்னுள்ளில் சென்றுவிட்டான். இதோ மறுபடி வெளியில் வந்துவிட்டான். வா, வா அப்பா! இந்த ஏழையின் மடியில் உட்கார வா'' என்று புலம்பினர்.

கோபாலன் இதுபோலச் சில சமயம் ஸ்ரீராமகிருஷ்ணரோடு கலந்து நின்றான். சில சமயங்களில் பாலகோபாலனைக் தன் லீலைகளைச் செய்தான். ஒரு சமயம் ஸ்ரீராமகிருஷ்ணரையே கோபால வடிவமாகக் காட்டினன். மறுசமயம் கோபாலனின் அன்னையை முழுமையாக வசீகரித்துக்கொண்டான்.

அகோரமணி அன்றுமுதல் உண்மையிலேயே 'கோபாலனின் அன்னை'யாக மாறிவிட்டார். ஸ்ரீராமகிருஷ்ணரும் அவரை 'கோபாலேர் மா' என்றே அழைக்கத் தொடங்கினர். அகோரமணியின் பாவநிலை கலைவதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் அன்று பலவித முயற்சிகளை மேற்கொண்டார். இவருடைய நெஞ்சில் கையை வைத்துத் தடவிக்கொடுத்தார். நல்ல நல்ல பொருள்களைக் கொண்டுவரச் செய்து ஊட்டினர். நாள் முழுவதும் தம்மருகில் வைத்துக்கொண்டு இவருக்குக் குளியல் ஆகாரம் முதலியவை பற்றிக் கவனித்தார்.

உணவருந்திக்கொண்டிருக்கையில் அகோரமணி, ''அப்பா கோபால்! உன்னுடைய இந்த ஏழை அன்னை இந்த ஜன்மத்தில் மிகுந்த துன்பத்தை அனுபவித்துவிட்டாள். தக்ளி சுற்றி, நூல் நூற்று, நெய்து, விற்று நாட்களைக் கடத்திவிட்டாள். அதனால்தான் இன்று இவ்வளவு ஆதரவு காட்டுகிறாய் போல் இருக்கிறது'' என்று கூறினர்.

மாலையில் ஸ்ரீராமகிருஷ்ணர் கோபாலனின் அன்னைக்கு விடை கொடுத்துக் காமார்ஹாடிக்கு அனுப்பியபொழுது, கோபாலனும் இடுப்பில் ஏறிக்கொண்டு சென்றான் வீட்டிற்குச் சென்று பல விதத்திலும் பிடிவாதம் பிடித்து அன்னையின் ஜபத்திற்கு இடைஞ்சல் செய்தான். கடைசியில் கோபாலனின் அன்னை ஜபத்தை விட்டு அவன் உறங்குவதற்குப் படுக்கை தயாரித்தார்.

கட்டிலின் மீது பாயை விரித்தார். மிருதுவான மெத்தையோ தலையணையோ இவரிடம் இல்லை. கோபாலனே முணுமுணுக்க ஆரம்பித்து விட்டான். வேறு வழியின்றி அகோரமணி தமது இடக் கையில் அவனுடைய தலையை வைத்து, ''அப்பா! இன்று இப்படியே உறங்கு. இரவு கழிந்ததும் நாளை கல்கத்தா சென்று மிருதுவான தலையணை வாங்கி வரலாம்'' என்று சமாதானப்படுத்தினர்.

மறுநாள் காலை கோபாலனுக்கு உணவு தயார் செய்வதற்காகத் தோட்டத்திலிருந்து சிறு சுள்ளிகளைப் பொறுக்கி வரச் சென்ற பொழுது கோபாலனும் உடன்சென்று சிறு கட்டைகளைப் பொறுக்கி வந்து சமையலறையில் சேகரித்தான். சமையல் செய்யும்போதும் அருகில் அமர்ந்து முதுகில் அணைத்துக் கொண்டான். அகோரமணி சில சமயங்களில் அவனிடம் பிரியமான வார்த்தைகளைக் கூறினர்; சில சமயங்களில் கோபித்துக்கொண்டார். 卐

பெரியோர் உள்ளம்



பெரியோர் மனதைப் பொதுவாக வெண்ணெய்க்கு ஒப்பிடுவது வழக்கம்.

ஆனல் துளசிதாசர், வெண்ணெயைவிடப் பெரியோர் மனமே உயர்ந்தது என்று கூறுகிறார்.

அதற்கு அவர் கூறும் விளக்கம் வருமாறு: வெண்ணெய் தன்னைச் சிரமப்படுத்தினல்தான் உருகும். ஆனல், பெரியோர் மனம் பிறர் சிரமப்பட்டால் தானே உருகும். எனவே வெண்ணெயைவிடப் பெரியோர் மனமே உயர்ந்தது.

பரமார்த்தப் பிரசங்கம்

சுவாமி விரஜானந்தர்

எத்தனை வழிகளில் இயலுமோ அத்தனை வழி களிலும் இதயத்தைப் பேணி வளர்க்க வேண்டும். பிரேமை பக்தி என்ற கங்கையின் உற்பத்தி ஸ்தானமாகத் திகழும் கோமுகியாக இதயம் விளங்குகிறது.

இதயத்தின் மூலமாகத்தான் பகவானின் குரல் நமக்குக் கேட்கிறது. அந்த இதயக்குகை யில்தான் பகவான் தமது தரிசனத்தைத் தந்தருள்கிறார்.

இறைவனை அடைவதற்கும், ஞானம் பக்தி மோட்சம் ஆகியவற்றைப் பெறுவதற்கும், சாஸ்திரங்களைப் பயில்வதும் வித்யைகளைக் கற் பதும் அவசியமாகா. நடத்தை சரியாக அமை வதும் தெய்விக இயல்பு தோன்றி வளர்வதும் புத்தகப் படிப்பினால் ஏற்படுவதே இல்லை. சொல்லப்போனால், புத்தகப் படிப்பு, படித்த முட்டாளைத்தான் உருவாக்குகிறது.

வடமொழியில் புத்தகத்தைக் கிரந்தம் என்று சொல்வார்கள். "அது கிரந்தம் அல்ல, கிரந்தி (முடிச்சு அல்லது பந்தம்)" என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்.

* * *

தற்காலக் கல்விமுறையில் உள்ள விசேஷம் என்னவென்றால், உண்மையில் அது ஒன்றுக்கு ஒன்று பொருந்தவே பொருந்தாத பல விஷயங் களின் தொகுப்பாகவும் குழப்பத்தைத் தருவ தாகவும் அமைந்திருக்கிறது என்பதுதான். அதைப் பெறுகிற பலரிடம் அது மானசிக (கருத் துக்கள் மனதில் சரியாகக் கிரகிக்கப்படாத) அஜீர்ணத்தையே உண்டுபண்ணுகிறது. அந்தக் கல்வியின் விளைவு, பரீட்சையில் 'பாஸ்' செய்வது அல்ல; கழுத்தைச் சுற்றி ஒரு பாசத்தை (சுருக்குக் கயிற்றை) மாட்டிக்கொள்ளுவதுதான். ஆனால் அந்தோ! இந்தியர்களாகிய நம்மை இந்தப் 'பாஸ்' செய்வது என்ற மோகம் எவ்வளவு கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டது! வாழ்க்கையின் மிகவும் சிறந்த பகுதியாகிய இளமைப் பருவத்திலே நாம் நமது மனதின் ஆற்றல், உடலின் ஆற்றல் ஆகிய எல்லாவற்றை யும் அந்தக் கல்விக்கே அர்ப்பித்துவிடுகிறோம். வறுமையில் சிக்கியிருந்தும் இந்தக் கல்வியைப் பெறும் காரியத்துக்காக நாம் மிகவும் சிரமப் பட்டுப் பணத்தைத் திரட்டுகிறோம். உடல்சிர மத்தையும் மனவேதனையையும் சகித்துக்கொள் கிறோம்; அப்படி இருந்தும் நீண்ட காலத்திற்குப் பிறகு முடிவில் அந்தக் கல்வியால் பொதுவாக நமக்கு என்ன பயன் ஏற்படுகிறது? ஆரோக்கியம் கெட்டு எங்கும் இருளையே காண்பவர்களாகி விடுகிறோம்; ஏன்? வாழ்க்கைப் போராட்டத்தில் நமக்குத் தோல்வி ஏற்படுவதனால்தான் இத் தகைய பயன் விளைகிறது. இதற்கெல்லாம் மேலாக, இத்துடன்கூட, பாலியத் திருமணம் காரணமாக மனைவி மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால், அவனுடைய வாழ்க்கையின் பரிதாப நிலையை என்னவென்று சொல்வது!

நம்முடைய பல்கலைக் கழகங்களை அடிமை களின் உறைவிடங்கள், அடிமைகளை உண்டு பண்ணிக் குவிக்கும் தொழிற்சாலைகள் என்று சொல்வது பொய்யாகாது.

பள்ளிப் படிப்பும் கல்லூரிப் படிப்பும் நமது நாட்டில் தற்போது அடைந்திருக்கும் நிலையில் அவை வயிற்றுப் பிழைப்புக்கும் வழிசெய்வதாக இல்லை; வாழ்க்கையைத் திறமையாக நடத்து வதற்கு உதவி செய்வதாகவும் இல்லை; அவற்றுக்கு மாறாக இந்தக் கல்வி, தீமையை விளைவிப்பதாகவும் வாழ்க்கையின் உயிர்நாடி யையே அழிப்பதாகவும்தான் இருக்கிறது.

இவ்விதம் 'கல்வி பெற்றவர்' என்று சொல்லப்படும் மக்களில் பெரும்பாலானவர்களிடம்தான் ஒழுக்கத்திற்கு உரிய முதுகெலும்பே இல்லாமலிருக்கிறது. மதவாழ்க்கையில் ஈடுபாடே இல்லாமலிருக்கிறது; அவர்களிடம் தேசிய உணர்ச்சியே கிடையாது. அவர்கள் நடைபிணங்களாகவே வாழ்கிறுர்கள். அபூர்வமாக மிகவும் நல்ல சம்ஸ்காரங்களைப் பெற்றிருப்பவர்கள்தாம் இத்தகைய நிலையில் மூழ்கி அழிந்துபோகாமல் தப்பி வெளியே வர முடியும்.

* * *

கிடைத்தற்கரிய அபூர்வமான இந்த மனிதப் பிறவியை நீ பெற்றிருக்கிருய். இதைப் பெற்றிருக்கும் நீ இறைவனை அடைவதற்கு முயற்சி செய்வாயாக. ஆண்டவனை அடைவதனுல் எல்லாமே நமக்குக் கிடைத்துவிடுகிறது. அதன் பிறகு அடைவதற்கு உரிய வேறு எதுவுமே எஞ்சியிருப்பதில்லை.

இறைவனை அறிந்துகொள்ள முயற்சி செய். அவரை அறிந்துகொண்டால் எல்லாமும் அறியப்பட்டதாகிவிடுகிறது. அதன் பிறகு அறியப்பட வேண்டியதாக வேறு எதுவும் எஞ்சியிருப்பதில்லை.

இறைவனிடமே அன்பு செலுத்துவாயாக. அவரிடம் அன்பு செலுத்துவதனுல், அன்புக்கு உரிய வேறு எல்லாப் பொருள்களும், பெண் பொன் பற்றுதல்களும் வெறும் குப்பையும் சாம்பலுமாகவே தோன்றும்.

உன் வாழ்க்கையைத் தக்க முறையில் அமைத்துக் கொள்வதன்மூலம், மரணம் என்பதற்ற வாழ்க்கையை அடைவதற்கு வழி செய்துகொள்.

* * *

பெருமளவிற்கு ஊக்கமும் பக்தியும் உயர்ந்த ஓர் ஆன்மிக இலட்சியத்தின்மீது கொள்ளப்பட வேண்டும். ஆத்மசாதனை முற்றும் அவசியமாகும். அது ஏகாந்தமான, ஒருமுகப்பட்ட, கடுமையான ஆத்மசாதனையாக அமைந்திருக்க வேண்டும்.

ஆத்மசாதனையைப் பற்றி ஒரு மணங்குப் பேச்சுப் பேசுவதைவிட ஒரு சேர் பயிற்சி செய்வது உத்தமமானது. ஒரு துளிப் பிரேமை பக்தியானது வேட்கையைத் தணிவிப்பது போன்று, கடலளவு சாஸ்திர ஞானமும் ஆன்மிக வேட்கையைத் தணிவிக்காது. பிரேமை பக்தி என்பது திரட்டுப்பால் போன்றது, பாலேடு போன்றது, வெண்ணெய் போன்றது. வேதசாஸ்திரங்கள் பற்றிய நூலறிவு முழுவதும் வெறும் மோர் போன்றது.

மதக்கொள்கைகள் பற்றிய வாதப் பிரதிவாதங்களும் சாஸ்திரப் பிரவசனமும் விமர்சனமும் சொற்பொழிவுகளும்—இவை போன்றவை எல்லாம் தாழ்ந்த நிலையிலுள்ள மக்களுக்கு ஆனவை — அவர்கள் அவற்றைக் கொண்டு மகிழ்ச்சியுடன் இருக்கட்டும். மோர் குடிக்க விரும்புவோர் மோரைக் குடிக்கட்டும். நீயோ திரட்டுப்பாலையும் பாலேட்டையும் வெண்ணெயையும் மனமாரத் திருப்தியாக உட்கொள்ளுவாயாக.

செய்திகள்

※ சிவகாசி, ஸ்ரீ சுவாமிஜி சன்மார்க்கப் பேரவையின் சார்பாகச் சிவன் கோவிலில் 19-6-81 வெள்ளிக்கிழமை இரவு 6-45 மணி முதல் 8-மணி வரை சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. சுவாமி சர்வக்ஞானந்தர், சுவாமி ஏகாத்மானந்தர், சுவாமி அவ்யயானந்தர், சுவாமி சம்பிரக்ஞானந்தர், சுவாமி ராகவேசானந்தர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அன்று இரவு 8-15 மணிக்கு 'ஸ்ரீராமகிருஷ்ணர்—ராணி ராஷ்மணி வரலாறு' திரைப்படம் திரையிடப்பெற்றது.

※ வேலூர், ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம் 22-6-81 ஆம் நாள் 'ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா' என்ற நர்சரிப் பள்ளியைத் துவக்கியது. பள்ளியின் துவக்க விழாவிற்கு சுவாமி சர்வக்ஞானந்தர் தலைமை வகித்துப் பேசினுர். சுவாமி கபீரானந்தர் பள்ளியைத் துவக்கி வைத்து ஆசியுரை வழங்கினுர்.

※ திருவான்மியூரில் 28-6-81 ஆம் நாள் காலை 10-மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண பக்தர்கள் ஏற்பாடு செய்திருந்த சத்சங்கக் கூட்டத்தில், சுவாமி தன்மயானந்தரின் ஆன்மிகச் சொற்பொழிவு நடைபெற்றது.

※ அரக்கோணம், ஸ்ரீராமகிருஷ்ண — விவேகானந்த மன்றத்தின் சார்பாக ராமர் கோவிலில் ஜூலை 5 ஞாயிறன்று காலை 9 மணி முதல் 10 மணிவரை சுவாமி விபுதானந்தர் 'உபாசனை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினுர்.

மனுஸ்மிருதியில் சில கருத்துக்கள்

தமிழில் : 'அண்ணு' சுப்ரமண்யம்

1. குருவுடனும் பெரியவர்களுடனும் உட்கார்ந்துகொண்டும் படுத்துக்கொண்டும் வாயில் எதையாவது மென்றுகொண்டும் எங்கேயோ அலட்சியமாகப் பார்த்துக்கொண்டும் அவர்கள் சொல்வதைக் கேட்பதோ, அவர்களுடன் பேசுவதோ கூடாது.

2. குரு உட்கார்ந்திருக்கும்போது சீடன் நின்றுகொண்டும், அவர் நின்றுகொண்டிருக்கும் போது அவரை நெருங்கிச் சென்றும், அவர் எதிரில் வந்தால் விரைந்து எதிர்கொண்டு சென்றும், அவர் நடந்துகொண்டிருந்தால் தொடர்ந்து ஓடியும் அவரை அனுசரிக்க வேண்டும்.

3. குருவின் முன்னிலேயில் எப்பொழுதும் சீடனுடைய ஆசனமோ படுக்கையோ அவருடையதைவிடத் தாழ்ந்ததாக இருக்கவேண்டும். குருவின் கண்பார்வையில் இஷ்டப்படி அலட்சியமாக உட்கார்ந்திருக்கக் கூடாது.

4. குருவைப்பற்றிய பழியோ நிந்தனேயோ பேசப்படும் இடத்தில் சிஷ்யன் இருகாதுகளேயும் பொத்திக்கொள்ள வேண்டும். அல்லது அங்கிருந்து வேறிடம் போய்விட வேண்டும்.

5. மண்வெட்டியினுல் பூமியை ஆழத் தோண்டி எப்படி ஒருவன் தண்ணீரைப் பெறுகிருனே அப்படியே குருவிற்குப் பணிவிடை செய்பவன் அதனுல் குருவினிடம் ஆழ்ந்துள்ள வித்யையை அடைகிருன்.

6. ஆசாரியன் பரப்பிரம்மஸ்வரூபி; தந்தை பிரஜாபதியான பிரம்மாவின் ஸ்வரூபி; தாய் பூதேவியின் ஸ்வரூபமுடையவள்; உடன்பிறந்த சகோதரன் தானேயாகிய ஆத்மஸ்வரூபி.

7. தாயினிடம் பக்தியினுல் இம்மையிலுள்ள இன்பங்களேயும், தந்தையினிடம் பக்தியினுல் மறுமையில் சுவர்க்கலோக இன்பத்தையும், குருவின் சேவையினுல் பிரம்மலோகப் பேரானந்தத்தையும் ஒருவன் அடைகிருன்.

இந்த மூவர்க்கும் சேவை செய்வதனுல் ஒரு புருஷனுடைய கடமை பூர்த்தியாகிறது. இது தான் கண்கண்ட உத்தம தருமம். மற்றதெல்லாம் அதற்குக் கீழ்ப்பட்டதேயாகும்.

8. எங்கே மாதர்கள் பூஜிக்கப்பெறுகிருர்களோ அங்கே தேவதைகள் மகிழ்ச்சியடைகிருர்கள். எங்கு இவர்கள் பூஜிக்கப்பெறுவதில்லேயோ அங்கு எல்லாக் காரியங்களும் பயனற்றவையாகும்.

9. எந்தக் குலத்தில் மனேவியிடம் கணவன் பரிபூர்ணமான சந்தோஷத்துடன் இருக்கிருனே அவ்வாறே கணவனிடம் மனேவியும் இருக்கிருளோ, அங்கே எப்பொழுதும் மங்களம் நிறைந்திருக்கும் என்பது நிச்சயம்.

10. மந்திர ஜபங்களால் நிறைந்த குலங்கள் பொருள் உடைமையில் குறைந்தவையாக இருப்பினும் உயர்ந்த குலங்களுடன் கணக்கிடப் பெறுபவையாகின்றன; பெரும் புகழையும் பெறுகின்றன.

11. வேதமோதுதலும் கற்பித்தலும் பிரம்ம யக்ஞம். பித்ருக்களேக் குறித்துத் தர்ப்பணம் பித்ருயக்ஞம். தேவதைகளுக்கு ஹோமம் தேவ யக்ஞம். காக்கை முதலிய உயிர்களுக்கும் பூதங்களுக்கும் இடும் பலி பூதயக்ஞம். அதிதிகளே உபசரித்துப் பூஜிப்பது மனுஷ்ய யக்ஞம். இவையே பஞ்ச மகாயக்ஞம் எனப்படும்.

12. தேவதைகள், அதிதி, வேலேக்காரர்கள், பிதிருக்கள், ஆத்மா ஆகிய ஐந்து வர்க்கத்தையும் எவன் திருப்தி செய்விக்கவில்லேயோ அவன் மூச்சு விட்டுக்கொண்டிருந்தாலும் வாழவில்லே.

13. தன் வேதத்தின் அத்தியயனத்திலும் தேவபூஜையிலும் அதற்கான கருமங்களிலும் ஒருவன் இடைவிடாத ஈடுபாடுடையவனுக இருக்க வேண்டும். தெய்விகக் காரியங்களில் ஈடுபாடுடையவன் நிச்சயமாகச் சராசரப் பிரபஞ்சத்தைத் தாங்குபவனுகிருன்.

14. எப்படி வாயுவை நாடி எல்லாப் பிராணிகளும் உயிர் வாழ்கின்றனவோ, அப்படியே எல்லா ஆசிரமங்களும் (பிரம்மசாரி, வானப்ரஸ்தன், சந்நியாசி ஆகியோர்) கிருகஸ்தனே நாடி வாழ்கிருர்கள்.

15. எவனெருவன் தன்னேயே காரணமாகக் கொண்டு சமைக்கிருனே அவன் வெறும் பாவத்தையே உண்பவனுகிருன். ஆனுல் பஞ்ச மகாயக்ஞம் செய்து எஞ்சியதை உண்கிறவனுக்கு அதுவே நல்லவர்களின் அன்னம் என்று வேதம் விதிக்கிறது.

16. சான்ருேர்களுக்கு எது எது பிடிக்குமோ அது அதை வஞ்சனேயின்றிப் பரிமாற வேண்டும். வேதங்கள் கூறும் கதைகளேயும் பாராயணம் செய்ய வேண்டும். இது பிதிருக்களுக்கு இஷ்டமானது.



அரிஜனப் பெரியார்

த்ரிசக்தி பாததூளி T. V. கல்யாணசுந்தரம்

நந்தனார் சரித்திரம் என்ற பெயரைக் கேட்டதும் நமக்கு உடனே நினைவுக்கு வருபவை சாதிக் கொடுமை பற்றிய எண்ணங்கள்தாம்.

ஒரு புனிதமான சரித்திரத்தின் பெயரைக் கேட்கும்போது, துவேஷ எண்ணங்கள் மட்டுமே நினைவுக்கு வருகிற ஒரு முரண்பட்ட காலத்தில் நாம் இன்று வாழ்கிறோம் என்பதை நினைத்துப் பார்க்கும்போது மனம் வருந்துகிறது, வெட்கப்படுகிறது.

எந்த விஷயத்தையும் மனிதன் அவ்வப்போது பிரசாரத்திற்கு உரிய கோணத்தில் மட்டும் பார்த்து வந்திருக்கிறானே தவிர, அந்த அந்த விஷயத்தின் உண்மைக் கோணத்தையும், தத்துவத்தையும் அவன் தானாகப் பார்ப்பதுமில்லை, பிறரைப் பார்க்க விடுவதும் இல்லை. இது மனிதன் தன்னை அறிவாளி எனப் பிரகடனப் படுத்திக் கொள்ள ஆரம்பித்த கட்டத்தில் விதைத்த விஷ வித்து. என்றைக்கு இவன் தன்னடக்கத்தை மறந்து ஆணவத்திற்கு அடிமையாகிப் புகழ் தேட ஆரம்பித்தானோ, அன்றே அந்த விஷவிதை முளைவிட ஆரம்பித்துச் செழிப்பாக வளர ஆரம்பித்தது. பின்பு சுயநலவாதிகளுக்கு இந்த விஷச் செடியின் வளர்ச்சியே வெற்றிகளுக்கு ஆதாரமாக அமையலாயிற்று. தூய்மையான ஆன்ம விஷயம் சுயநலவாதிகளால் நாற்றமெடுத்த சாதிப் பிரச்னையாக மாற்றி அமைக்கப்பட்டு, அவர்களது துஷ்பிரயோகத்திற்கான ஆயுதமாக மாற்றப்பட்டுவிட்டது.

இந்தப் போக்கு நமது பாரம்பர்யச் செல்வங்களான புராணங்களையும் காவியங்களையும் இலக்கியங்களையும் அறநூல்கள் என்ற நிலையிலிருந்து தாழ்த்தி, அவை சர்ச்சைக்கு உரிய, கேலிக்கு உரிய விஷயங்களாக ஆக்கப்பட்டுவிட்டன. இந்தப் போக்கை மாற்றி அமைக்க, சுயசிந்தனையுடன் ஒரு புதிய கோணத்தில், புனித உணர்வுடன் ஒவ்வொரு விஷயத்தையும் அணுகுவது, அறிந்துகொள்வது என்ற பழக்கம் ஏற்பட வேண்டும். அப்போது ஒவ்வொரு விஷயத்திலும் ஊடுருவியுள்ள ஆன்மிக ஒளி நமக்குப் புலனாகும், வழிகாட்டியாக அமையும். நாம் யாவரும் காண ஏங்கும் அமைதிநிலை உதயமாக ஆரம்பிக்கும்.

நந்தன் சரித்திரம் என்பது திருநாளைப் போவார் என்று அழைக்கப்பெற்ற சிவபக்தரின் வாழ்க்கையைப் பற்றிய கதை. இது பெரிய புராணத்தில் வருகிறது.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர் திருநாளைப் போவார். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இறைவனால் நேசிக்கப்பட்டார்கள். அவர்களும் அவ்வாறே இறைவனை ஒருமுகமாய் வழிபட்டவர்கள், வெவ்வேறு பாவங்களில். ஒருவர் இறைவனை நண்பனாக நேசித்தார். மற்றொருவர் இறைவனை யஜமானனாக நேசித்தார். ஒருவர் இறைவனைப் பெற்றோரென நேசித்தார். இன்னொருவர் இறைவனின் அடியார்க்குத் தொண்டு செய்வதே பெரும் யோகமாய்க் கொண்டு வாழ்ந்தார். இப்படி எண்ணிறந்த புனிதக் கோணங்களிலே அமைந்து அருமையான வழிகாட்டியாகத் திகழ்ந்து வரும் புராணங்களை, இலக்கியங்களை நமது ஆசானாகக் கொள்வதே நமக்கும் நாட்டுக்கும் நன்மை தரும்.

பெரிய புராணத்தில் வரும் திருநாளைப் போவாரின் சரித்திரத்தைப் படிக்கும்போது அங்கே சாதிப் பிரச்னையே எழவில்லை. இறைவனையும் தூய்மையான பக்தனையுமே சந்திக்கிறோம். அதிலே வேதியர் வந்து நந்தனைத் தடுக்கவுமில்லை; நந்தன் வேதியரிடம் போய்த் தர்க்கம் செய்யவுமில்லை. நந்தன் என்ற புனிதப் பிறவி பிறந்தது முதலே இறையெண்ணத்தைத் தன் மூச்சாக அமைத்துக்கொண்டு பிறந்

படிக்கத் தகுந்த புத்தகங்களைவிட படிக்கத்தகாத புத்தகங்களே ஏராளம்.
—ரவீந்திரநாத் தாகூர்

இந்தச் சம்சாரம் ஒரு கசப்பு மரம். இதன் இரண்டு பழங்கள் மட்டும் அமுதத்திற்குச் சமம். அதாவது நல்ல பேச்சும் நல்லவர்களின் சேர்க்கையும்.
—ஒரு சுலோகம்

மனதில் எழும் தீய எண்ணங்களை எல்லாம் அகற்றிவிட வேண்டும். ஒரு தீய எண்ணத்துக்கு இடம் தந்தால் உடனே கோட்டைத் துவாரத்து வழியாகப் பகைவருடைய படைகள் நுழைவது போல ஆயிரக் கணக்காக வந்து நுழைந்துவிடும்.
—ராஜாஜி

திருந்தது. வளர வளர இறையெண்ணம் அதன் இயல்பைப் பூரணமாய் ஆக்கிரமித்துக்கொள்ள ஆரம்பித்தது. இறுதியில் இறைவனுடன், மறுபிறவிக்கு வாய்ப்பே இல்லாத ஐக்கிய நிலையெய்தியது.

இது நந்தனுருக்கு மட்டும் எவ்வாறு சாத்தியமாயிற்று என்று பார்ப்பது நம் கடமையாகும்.

மனித வாழ்வு என்பது அகவாழ்வு புறவாழ்வு அல்லது உள்வாழ்வு வெளிவாழ்வு என்ற இருநிலைகளை ஆதாரமாய்க் கொண்டது. எந்த விஷயத்தையும் இந்த இரண்டு கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து சமரசமான முடிவைக் கண்டு கொள்வதுதான் சராசரி மனிதனுக்கு நன்மை பயக்கும் செயல். ஒவ்வொருவரும் இந்த உள்வாழ்வு வெளிவாழ்வு ஆகிய இரண்டிலும் நெறி தவறாமல் வாழ்ந்து முடிக்கும் போதுதான் முழு மனிதனாகும் பேறு அடைகின்றனர். இந்தக் கோணத்தை வலியுறுத்துவதுதான் நந்தன் சரித்திரம்.

நந்தனர் பிறந்தது ஒரு புலையர் குடும்பத்திலே. அவர் வயது வந்ததும் தமது குடும்பத்தாரையொட்டி அவர்கள் செய்து வந்த தொழிலிலே முழு ஆர்வம் காட்டி உண்மையாக உழைத்து வெளிவாழ்வைச் சரிவர நடத்தினர். தம்மைச் சார்ந்தவரோடு, தொழிலைத் தவிர, அவர்களது மற்ற எந்த நடவடிக்கைகளிலும் இவருக்கு ஈர்ப்பு ஏற்படவே இல்லை. தம்முள்ளே தோன்றிய ஓர் ஆழ்ந்த தாகத்திற்குத் தம்மை அடிமைப்படுத்திக்கொண்டார். தமது சூழலுக்கேற்ப உள்வாழ்வைத் தொடங்கினர். அதில் செழுமையாய் வளர்ச்சியடைய ஆரம்பித்தார். இவரது உள்வாழ்வு வளர்ச்சி, இவரது வெளிவாழ்வுக் கடமைகளில் குறுக்கிடாதவாறு செம்மையாகவும் வாழ்ந்தார். அடங்கி வாழ்ந்தார்; ஆடி வாழவில்லை. இறையருள் கூடத் தொடங்கியது.

இறைவன் யாவருக்கும் சமமே. எவருக்கும் உரிமையானவனே. யார் ஒருவர் சமரச நிலை வழுவாமல் உள்வாழ்வும் புறவாழ்வும் புண்படாமல் நெறியோடு வாழ்ந்து தேர்கின்றனரோ, அவர் எங்கு இருப்பினும், சேரியில் இருப்பினும், சோலையில் இருப்பினும் எமக்கு இனியவரே என இறைவன் உணர்த்திக் காட்ட நினைத்தான்.

நந்தனரின் உள்தாகம் அதிகமாகிக் கொண்டே வந்தது. இறைவன் திருப்புன்கூரில் நந்தியை விலகச் செய்து நந்தனுக்குக் காட்சி தந்தான். நந்தனது உள்ளம் நன்றிப் பெருக்கால் நெகிழ்ந்தது. நெகிழ்ச்சியின் எழுச்சியிலே உள்வாழ்வின் முக்கியத்துவத்தை நந்தனர் முழுமையாக உணர ஆரம்பித்தார். அப்படி உணர்ந்ததன் விளைவாகத் தில்லை சென்று இறைவனைத் தரிசிக்க எண்ணம் கொண்டார்.

ஆனால் வெளிவாழ்வின் கடமைகளை எண்ணி எண்ணி,நாளைப் போவோம்,நாளைப் போவோம் எனத் தள்ளிப் போட்டுக்கொண்டே, வெளிவாழ்வின் கடமைகளையும் சரிவர ஆற்றிக் கொண்டே, உள்வாழ்வில் ஊறிக் கொண்டிருந்த இறை எண்ணத்தைப் பதப்படுத்தியவாறு, பக்குவப்படுத்தியவாறு வாழ்ந்து வந்தார். இதை மடமை என அயலார் எண்ணியிருக்கலாம். ஆனால் இவர் அதைத் தமது உடைமை என உரமாக வாழ்ந்துகொண்டிருந்தார்.

இறைவன் நந்தன் மூலமாக முழு மனிதன் வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும், அவன் எவ்வாறு அதை அமைத்துக்கொள்ள வேண்டும்,

அதன் விளைவு என்ன என்பதை மனிதனுக்கு உணர்த்தத் திருவுள்ளம் கொண்டான்.

நாளைப் போவோம், நாளைப் போவோம் எனத் தயங்கிய நந்தனது உள்ளத்தில் நாளையே போய்விடலாம் என்ற உறுதியை இறைவன் ஊட்டினான்.

நந்தன் தில்லையை நோக்கிப் பயணமானார்; அதாவது தமது வெளிவாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உள்ளம் அதனின்று துறவியாகி விட்ட நிலையில் தில்லையை வந்தடைந்தார். தில்லைக் கோயிலோ திருப்புன்கூர் கோயில் போல அல்லாமல் வேறு விதப் பிரம்மாண்ட மான அமைப்புடன் இருந்தது. திருப்புன்கூரில் இறைவனைத் தரிசித்தாற் போன்ற வாய்ப்பு தில்லையிலே இருக்க முடியாத சூழ்நிலையைக் கண்டார்.

ஆலயத்தின் மதில்களை ஐயனை நினைத்தவாறே சுற்றிச் சுற்றி வரலானார். நாட்கள் ஓடியவாறே இருந்தன. நந்தனார் தளரவில்லை, சலிக்கவில்லை, நம்பிக்கையை நலிய விடவுமில்லை. முன்னிலும் அதிகமாய் உள்வாழ்வோடு ஒன்றி உறுதியை வளர்த்தவாறே ஊனை வருத்தினார். இறை வனின் உள்ளம் கனிந்தது. இறைவன் தன்னை ஆராதிக்கும் அன்பர்களின் கனவிலே தோன்றி நந்தனைப்பற்றிச் சொல்லி நந்தனைத் தீயிலே புனித முழுக்காட்டித் தன்னிடம் அனுப்பப் பணித்தான்.

'இதென்ன அநீதி? இவ்வளவு அரிய பக்தனைத் தீயில் முழுகச் செய்தால்தான் புனிதமாக்க முடியுமா? இறைவன் நினைத்திருந்தால் இன்னும் சுகமான வழியில் புனிதமாக்க முடியாதா?' என்ற கேள்விகள் அரைவேக் காட்டுத்தனமாக நம்முள் எழ முடியும். ஆனால் நந்தன், தம்வரை வெளிவாழ்வின் அன்றைச் சூழலுக்குத் தம்மை உட்பட்டவராகவே பாவித்து நெறியோடு வாழ்ந்ததனால், வேறு சுலபமான முறைகள் நந்தன் மனதிற்குத் திருப்தி தரமாட்டா என்பதை இறைவன் அறிந் திருந்தான். தீயில் இறங்குவதானாலும், இறை வனைக் காணுவதென்றால் மனமுவந்த உடன் பாடு தமக்கு உண்டு என்ற உறுதியிலே வாழ்ந்த நந்தனின் உயர்வை, திண்மையை, உலகுக்கும் மனிதனுக்கும் உணர்த்த வேண்டாமா? உடலாசைகளை விட்டு, வெளிவாழ்வையும் துறந்து, உயிராசையை விட்டு, உள்வாழ்வை முழுமையாக்கிக்கொள்ள, உரமான, உண்மை யான உள்ளம் வேண்டும். வேறு சின்னங்களோ செயல்களோ மந்திரங்களோ தேவையில்லை என்பதை உணர்த்த வந்ததுதான் நந்தன் சரித்திரம்.

கீதையிலும் இறைவன் இதையேதான் வேறு விதமாகச் சொன்னான். பிரம்மத்தை அறிந்தவ னிடத்தில் ஞானமாக நான் ஜொலிக்கிறேன். வீரனிடத்தில் வீரமாக நான் ஒளிர்கிறேன். வியாபாரியினிடத்தில் திறமை வடிவாக நான் திகழ்கிறேன். உழைப்பவனிடத்தில் உழைப்பின் உருவில் நடமிடுகிறேன். ஆக இவை யாவுமே நான். எதுவும் என்னிலிருந்து வேறுபட்டதல்ல, அறிந்துகொள்வாய்' என்று பார்த்தனுக்கு உபதேசித்ததன் வாயிலாக, கீதையை உலகுக்கு அளித்தான் கண்ணன்.

அப்படியானால் இந்த வேறுபாடுள்ள, மாறு பாடுள்ள கோணங்கள் நமது அறியாமையின், சுயநலத்தின் பிரதிபலிப்பே என்றாகிறது. நமது இந்தத் தவற்றைச் சுட்டிக் காட்டுவதுதான் நந்தனின் உள்வாழ்வும் வெளிவாழ்வும் நிறைந்த சரித்திரம்.

அதை அதனுடைய உண்மைக் கோணத்தில் உணர்ந்து பயன் பெறுவோம். அமைதிக்கு அரண் அமைப்போம். ஆன்மிக உயர்வை எய்துவோம்.

வேதாந்தம்

மக்களுக்குத் துன்பம் வரக் காரணமாயிருப்பது உடலே. உடலில்லாதவனுக்கு இன்ப துன்பங்களில்லை. உடல் ஏன் வந்தது? அவரவர் செய்த புண்ணியப் பாவச் செயல்களால் வந்தது. ஏன் புண்ணிய பாவச் செயல்களை மனிதன் செய்கிறான்? ஆசையால் செய்கிறான். ஆசை ஏன் உண்டாயிற்று? அபிமானத்தால் உண்டாயிற்று. அபிமானம் ஏன் உண்டாயிற்று? அவிவேகத்தினால் உண்டாயிற்று. அவிவேகம் எதனால் தோன்றியது? அஞ்ஞானத்தால் தோன்றியது. அஞ்ஞானம் என்பது தன்னை அறிந்துகொள்ளாமை; அந்த அஞ்ஞானம் எப்படி உண்டாயிற்று என்று சொல்ல முடியாது. அது அநாதியாக உள்ளது. அது ஞானத்திற்கு எதிராகிய ஒரு சக்தி; ஞானத்தால் அழிந்துவிடக் கூடியது. எனவே அஞ்ஞானத்தால் அவிவேகமும், அவிவேகத்தால் அபிமானமும், அபிமானத்தால் ஆசையும், ஆசையால் செயல் களும், செயல்களால் உடலும், உடலால் துன்பமும் ஏற்படுகின்றன.

திருக்கோயில்கள்

எம். கே. பாலசுப்பிரமணியன், ஐ. ஏ. எஸ்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

'கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்'

மேற்கண்ட முதுபெரும் அறிவுரைகள் ஆண்டவனை வழிபட வேண்டிய முக்கியத்துவத்தையும் அவன் கோயில் கொண்டிருக்கும் ஆலய வழிபாட்டின் அவசியத்தையும் அறிவுறுத்துவனவாகும்.

திருக்கோயில்கள் பல வகைப்படும்.

ஒருவர் தமது ஆன்மிக மேம்பாட்டிற்காகத் தம் வீட்டிலோ அல்லது தாம் இருக்கும் இடத்திலோ ஓர் இடத்தை ஒதுக்கி வைத்து, அங்கே தமது இஷ்ட தேவதையை இருத்தி, அதற்குப் பூசை முதலியன செய்யும் இடம் ஒருவகைக் கோயிலாகும். இவ்வாறு தமது ஆன்மிக மேம்பாட்டிற்கும், தமது குடும்பத்தினரின் மேம்பாட்டிற்கும் ஏற்படுத்தப்பட்ட வழிபாட்டு இடங்கள், 'ஆத்மார்த்த பூசை'க்கு என நிறுவப் பட்ட குடும்பக் கோயில் அல்லது இல்லக் கோயில்களாகும்.

ஆரம்பத்தில் இப்படி நிறுவிய குடும்பக் கோயில்கள், தமக்காகவும் தமது குடும்பத்திற்காகவும் முதலில் ஏற்படுத்தப்பட்டாலும், 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற அடிப்படையில், 'இறையுணர்வு பெற விரும்பும் பொதுமக்கள் பலரும் வந்து வழிபாடு நடத்தட்டும், ஆன்மிக மேம்பாடு அடையட்டும்' எனப் பொதுமக்களுக்கும் திறந்து விட்ட இல்லக் கோயில்களும் பல உள்ளன.

இது போலவே ஒரு சமூகத்தினர் அல்லது இனத்தினர் தமது சுற்றத்தினரின் ஆன்மிக முன்னேற்றத்திற்கென்று அமைத்த வழிபாட்டுத் தலங்கள் (Denominational temple) அந்த இனத்திற்கு மட்டுமின்றி, மற்றவர்களும் பயன் பெறும் வகையில் பொதுமக்களின் வழிபாட்டிற்கும் திறந்துவிட்ட கோயில்கள் ஒரு வகைப்படும்.

இவை தவிர, பொதுமக்களுக்காகவே அவர்கள் எல்லோரும் எவ்வித வேற்றுமையுமின்றி வழிபாடு செய்து நன்மை பெறவேண்டும் என்பதற்காகவே, பொதுமக்களாலோ அல்லது பொதுத் தொண்டு செய்து வந்த துறவிகளாலோ மற்றும் அரசர்களாலோ நிர்மிக்கப் பெற்ற பொதுக் கோயில்கள் ஒரு வகைப்படும். இவை அனைத்தும் 'பரார்த்த பூசை'க்கு என்று நிறுவப்பட்டவையாகும்.

இத்தகைய கோயில்கள் இன்று நாட்டில் ஏராளமாக உள்ளன. இங்கு நடத்தப்பெறும் காலவழிபாடு முதலியன, நாட்டு மக்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டனவாகும்.

ஐம்பெரும் பூதங்களையும் உலகிலுள்ள சீவராசிகள் அனைத்தையும் படைத்தவன் ஆண்டவன். ஐம்பெரும் பூதங்களும் மண்ணும் விண்ணும் சேர்ந்து பார்ப்பதற்கு ஓர் அண்டத்தைப் போல் (முட்டையைப் போல்) காட்சியளிக்கின்றன. இந்த அண்டத்திற்குள் அடங்கிய அத்தனையும் பிண்டங்கள் ஆகும். இவை நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றால் இயக்கப்படுகின்றன. இந்த அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்தவன் ஆண்டவன். அவனின்றி ஓர் அணுவும் அசைவதில்லை, அவன் எங்கும் இருக்கிறான். இல்லாத இடமே இல்லை. பசுமாட்டின் உடல் முழுவதும் பரவியிருக்கும் இரத்தத்திலிருந்துதான் பால் கிடைக்கிறது. ஆனால், அது பசுவின் மடியிலிருந்துதானே கிடைக்கிறது? அதைப் போலவே ஆண்டவன் எல்லாவற்றிலும் எல்லா இடத்திலும் இருந்தாலும் வழிபாட்டுத் தலங்களான திருக்கோயில்களில் முறைப்படி அமைத்த மூர்த்திகளில் தங்கியிருந்து வேண்டுபவர்களுக்கு வேண்டுமாறு அருளமுதம் பொழிகிறான்.

நமது மூதாதையர் கோயில்களைத் தங்களது இருக்கையைப் போன்று மண்ணாலும் மரத்தாலும்தான் நிறுவினார்கள். கூரை வேய்ந்த திருக்கோயில்கள் இன்றும் தமது பழமையைக் காட்டிக்கொண்டு நிலைபெற்றுள்ளதை நாம் அறிவோம். நாகரிகமும் நல்லுணர்வும் பெருகப் பெருக ஆண்டவனது இருக்கைகள் புதுப்பிக்கப்பட்டு, பெரிய பெரிய திருக்கோயில்களாக நிறுவப்பெற்றன.

'பரார்த்த பூசை'க்கென்று நமது பெரியோர்கள் நிறுவிய திருக்கோயில்கள், நமது நாட்டு மக்களின் கலை, கலாசாரம், சமயம்,

தத்துவம், வாழ்க்கைமுறைகள் ஆகிய அனைத்தையுமே தம்முடைய அடிப்படையாகவும் நிலைக்களனாகவும் ஏற்படுத்திக்கொண்டுள்ளன. குறிப்பிட்டுக் கூறினால், பழம்பெரும் நாகரிகத்தையும், பண்பாட்டு நலன்களையும் விளக்கிக் கொண்டு, கலைப்பெருஞ் சின்னங்களாக நம் நாட்டுத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் பண்டைத் தமிழனின் கட்டிடக் கலையையும் சிற்பத் திறனையும் வெளிப்படுத்தும் நிலைக்களன் களாகவும் கருவூலங்களாகவும் ஈடும் எடுப்புமின்றி நிலைத்து நிற்கின்றன. முற்றும் துறந்த முனிவர்களும், துறவு வாழ்க்கை வாழ்ந்த அருளாளர்களும், அறவழியில் வாழ்ந்த இறையுணர்வாளர்களும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் சித்தர் பெருமக்களும் இந்தத் திருக்கோயில்களைச் சார்ந்திருந்து, பாடிப் பரவித் திருக்கோயில்களுக்குப் புனிதத் தன்மையை ஊட்டி வளர்த்து வந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் சுமார் ஒரு லட்சம் திருக்கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. சைவ வைணவக் கோயில்கள், சக்தி பீடங்கள், ஆறு படைவீடுகள், பஞ்ச பூதத் தலங்கள், அட்ட வீரட்டானத் தலங்கள், சப்த விடங்கத் தலங்கள், சித்தர் கண்ட கோயில்கள், கிராம தேவதைக் கோயில்கள் இப்படிப் பலவும் இவற்றுள் அடங்கும்.

வைணவத் திருக்கோயில்களில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவை முக்கியமானவை. அவை திவ்ய தேசங்கள் எனப்பெறும். 108 திவ்யதேசங்களில் வடநாட்டில் 12, திருநாட்டில் 1 நீங்கலாகத் தமிழகத்தில் மட்டும் சோழநாட்டில் 40, பாண்டிய நாட்டில் 18, சேர நாட்டில் 13, நடுநாட்டில் 2, தொண்டை நாட்டில் 22 ஆக மொத்தம் 95 திவ்யதேசங்கள் உள்ளன. இந்தத் திவ்ய தேசங்களிலுள்ள திருக்கோயில்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவை.

இவ்வாறே சைவ நாயன்மார்களின் பாடல் பெற்ற (திருப்பதிகங்கள் கிடைத்துள்ள வகையில் மட்டும்) 275 சிவத் தலங்களில், 267 திருக்கோயில்கள் தமிழகத்தில் உள்ளன. மேற்கண்ட திவ்ய தேசங்களிலுள்ள திருக்கோயில்களும், சைவ சமய குரவர்களால் பாடல் பெற்ற சைவக் கோயில்களும், ஓராயிரம் ஆண்டுகளுக்கும் மிக முற்பட்டவையாகும். ஆதலால் அவை மிகவும் தொன்மையும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்தவையாகும்.

பஞ்சபூதத் தலங்களுள் காஞ்சீபுரமும் திருவாரூரும் பிருதிவித் தலங்களாகும். திருவானைக்கா அப்புத் தலம். திருவண்ணாமலை தேயுத் தலம். திருக்காளத்தி வாயுத் தலம். சிதம்பரம் ஆகாசத் தலம் எனப்படும். இப்படிப் பஞ்சபூதங்களும் சிவன் கோயில்களாக அமைக்கப்பெற்றுச் சிவ வழிபாட்டுத் தலங்களாக உள்ளன.

தமிழகத்தில் தனி முருகன் திருக்கோயில்கள் நூற்றுக்கு மேல் உள்ளன. எனினும் அவற்றுள் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்சோலை என்னும் திருத்தலங்களில் கோயில் கொண்டுள்ள முருகன், திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் காலத்திலிருந்தே சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் போற்றப் பெற்று விளங்கி வருகிறான்.

மேலும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றுள்ள முருகன் திருக்கோயில்கள் அனைத்தும், முருகபக்தர்களின் தனி வழிபாட்டுக்கு உரியவையாக விளங்கி வருகின்றன.

திருவொற்றியூர் வடிவுடையம்மன், திருமயிலைக் கற்பகாம்பாள், காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, அருணை உண்ணாமுலையம்மை, சிதம்பரம் சிவகாமி, திருவானைக்காவல் அகிலாண்டேச்வரி, திருவாரூர் கமலாம்பிகை, திருநெல்வேலி காந்திமதியம்மை, வைத்தீசுவரன் கோயில் தையல்நாயகி, கன்னியாகுமரி பகவதியம்மை, இராமேசுவரத்தில் பர்வதவர்த்தினி, திருவேற்காட்டில் தேவி கருமாரியம்மன், தஞ்சை மாரியம்மன், சமயபுரம் மாரியம்மன் ஆகிய அம்பாளின் திருக்கோயில்கள் எல்லாம் சக்திபீடங்கள் எனப் போற்றி வழிபாடு செய்யப்படுகின்றன.

சித்தர்கள் பல திருக்கோயில்களில் சமாதி கூடித் தவம் புரிந்து வருகின்றனர் என்பது பெரியோர் வாக்கு. திருமூலர் சிதம்பரத்திலும், திருநந்திதேவர் சீர்காழியிலும், தன்வந்தரி வைத்தீசுவரன் கோயிலிலும், கமலமுனி திருவாரூரிலும், சட்டைமுனி திருவரங்கத்திலும், கருவூர்த்தேவர் கருவூரிலும், போகர் பழநியிலும், சுந்தரானந்தர் மதுரையிலும், சுந்தரமகாலிங்க சுவாமிகள் சதுரகிரியிலும், மச்சமுனி திருப்பரங்குன்றத்திலும், கும்பமுனி திருவனந்தபுரத்திலும், கோரக்கர் திருப்பருப்பதத்திலும், குதம்பைச் சித்தர் திருக்கழுக்குன்றத்திலும், அகப்பேய்ச் சித்தர் திருமுதுகுன்றத்திலும், பாம்பாட்டிச் சித்தர் திருக்கடவூரிலும், பதஞ்சலி முனிவர் இராமேசுவரத்திலும், இடைக்காட்டுச் சித்தர் திருவண்ணாமலையிலும் சமாதிகொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்று அந்தத் தலங்களின் பெருமையைப் பெரியோர் புகழ்ந்து கூறுவர்.

தமிழ்நாட்டிலுள்ள ஏராளமான திருக்கோயில்களை அவ்வப்போது ஆண்டு வந்த அரசர்

களும் மற்றவர்களும் திருப்பணிகள் செய்தும் நன்கொடை வழங்கியும், புதிதாக எடுப்பித்தும், அவற்றை விரிவுபடுத்தியும் உள்ளனர். பல்லவ மன்னர் கி. பி. 600 - 900; சோழ மன்னர் கி.பி. 900-1150; பாண்டிய மன்னர் கி.பி.1100-1350; விஜயநகர அரசர்கள் கி. பி. 1340-1565; மதுரை நாயக்க மன்னர் கி. பி. 1600-1700 ஆகிய ஆண்டுகளில் எண்ணிறந்த கோயில்களுக்குத் திருப்பணி செய்துள்ளனர்.

மகாபலிபுரம், காஞ்சீபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், திருவரங்கம், கும்பகோணம், தஞ்சை, மதுரை, பழனி, திருச்செந்தூர், இராமேசுவரம் முதலிய திருத்தலங்களிலுள்ள திருக்கோயில்கள் இன்றும் நாடோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று வழிபடும் மாட்சி உடையவையாகத் திகழ்கின்றன.

நமது திருக்கோயில்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. அயல்நாட்டினரும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு திருக்கோயில்களுக்கு நன்கொடை அளித்து வியந்து பாராட்டியுள்ளனர். நமது திருக்கோயில்கள் கட்டிடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றன. இவை இசை, நடனம் ஆகியவற்றை ஆதரித்தன, அறச்சாலைகள், நீதிமன்றம், மருத்துவச்சாலை, நிதிநிலையம், தொழில் நிறுவனம், கலைவளர்கழகம், பணிநிலையம் ஆகியவையாகவும் செயற்பட்டிருக்கின்றன. கல்வெட்டுகள் மூலம் பண்டைக் கால வாழ்க்கை முறைகளை இவை நமக்குச் சித்திரிக்கின்றன.

வரலாற்றுப் பெருஞ்சிறப்பு

இராசசிம்ம பல்லவன் (கி. பி. 685 - 705) கட்டிய காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில்; இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 705-710) கட்டிய வைகுண்டப்பெருமாள் கோயில்; இராசராசசோழன் (கி. பி. 985-1014) எடுப்பித்த தஞ்சைப் பெரியகோவில்; இராசேந்திரசோழன் (கி.பி. 1012-1044) எடுப்பித்த கங்கைகொண்ட சோழபுரம் கோயில்; இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146 - 1164) எழுப்பிய மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில்; மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178-1223) தோற்றுவித்த திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயில் முதலியன எல்லையற்ற வரலாற்றுப் பெருஞ்சிறப்பு வாய்ந்தவையாகும்.

அயல்நாட்டார் ஈடுபாடு

நமது தமிழகக் கோயில்களை அயல்நாட்டினரும் கண்டு அகமிக மகிழ்ந்து போற்றுகின்றனர். ஆட்சன் (Hodgson) என்ற ஆங்கிலேயர் காஞ்சீபுரம் திருவேகம்பர் கோயில் மதிலைச் செப்பனிட்டார். லியோனார்டு பிளேஸ் (Leonard Place) என்னும் அயலவர், மதுராந்தகம் பெருமாள் கோயிலுக்குத் திருப்பணி செய்தார். வில்லியம் காரோ (William Garrow) என்பவர் பவானி சங்கமேசுவரர் கோயில் தேவநாயகி அம்பிகைக்குத் தந்தத்தால் செய்த ஊஞ்சல் ஒன்றை வழங்கி மகிழ்ந்துள்ளார். மதுரைக் கோயில் மீனாட்சியம்மைக்கு, ரூஸ் பீட்டர் (Rous Peter) என்னும் வெள்ளையர், தங்கத்தால் செய்த மணிகள் பதிப்பித்த அங்கவடிகளை (Stirrups) அளித்திருக்கின்றார். உலகப் புகழ் பெற்ற ஸாமர்ஸெட் மாம் (Somerset Maugham) என்னும் நூலாசிரியர், தாம் மதுரைக்கோயிலைக் கண்டு வியந்து விம்மிதமுற்றதாகத் தம்முடைய 'A Writer's Note-Book' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய செய்திகளால் தமிழகக் கோயில்களின் சிறப்பும் பெருமையும் புலனாகும்.

கட்டிடக் கலையும் சிற்பக் கலையும்

தமிழகத்துக் கோயில்கள் பண்டைக காலத்தில் பல்வேறு அமைப்புக்களைக் கொண்டு விளங்கின. அமைப்பு முறைகளை ஒட்டிக் கோயில்கள் பலவகைப் பெயர்களைப் பெற்றிருந்தன. ஆரூர்ப் பூங்கோயில், கடம்பூர்க் கரக் கோயில் (தேர்போல் அமைந்தவை), மீயச்சூர் இளங்கோயில் (பாலாலயம்), வைகல் மாடக் கோயில் (யானை ஏறும் படிகள் அமைந்தவை), கருப்பறியல் கொகுடிக் கோயில் (ஒரு வகை முல்லை) என்று, இன்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கும் முன்னரே இருந்து வந்த பல வகைக் கோயில்களின் பெயர்களைத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார்.

தமிழகக் கோயில்களின் கட்டிடக் கலைச் சிறப்பும் பெருமையும் சுமத்திரா, ஜாவா, பாலி, போர்னியோ, பர்மா, மலேசியா, இலங்கை, இந்தோனிசியா, சயாம், கம்போடியா, சம்பா முதலிய கடல் கடந்த நாடுகளிலும் பரவி விளக்கமுற்றன. ஜாவாவிலுள்ள போராபுதூர் (கி. பி. 750 - 850) புத்தர் கோயிலும், கம்போடியா அங்கோர்தாம் (கி. பி. 802-820) சிவன் கோயிலும், அங்கோர்வாட் (கி. பி. 1110-1150) பெருமாள்கோயிலும், தமிழகக் கோயில் கட்டிடக் கலை, சிற்பக் கலைகளின் வளர்ச்சியின் சிறப்பையும் பரவலையும் விளக்குவனவாகும். ※

கோபம் எழும்போது, அதன் விளைவுகளை எண்ணிப் பார். —கன்பூஷியஸ்

மனிதனுக்கு உள்ள மாண்பை இயற்கையிலேயே அறிந்து நடப்பதுதான் ஆண்மை.

—விவேகானந்தர்

காந்தியடிகளின் பொன்மொழிகள்



★ 'ஏசுவின் உபதேசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்' என்று தங்களைச் சொல்லிக்கொண்டு, அவரைச் சமாதானத்தின் மன்னர் என்று வர்ணிப்பவர்கள், பிரத்தியட்ச நடைமுறை வாழ்க்கையில் அந்த நம்பிக்கையில் ஓரளவைக்கூடக் காண்பிக்காமல் இருப்பதுதான் முதல் தரமான சோக நாடகம்.

★ ''உலகத்தில் நான் யாருக்கும் பயப்பட மாட்டேன். கடவுளுக்குத் தான் பயப்படுவேன். யார் மீதும் நான் கெட்ட எண்ணம் கொள்ள மாட்டேன். யாருடைய அநீதிக்கும் நான் பணியமாட்டேன். நான் உண்மையினுல் பொய்யை வெல்லுவேன். பொய்யை எதிர்த்துப் போராடுவதில் நான் சகல துன்பங்களையும் எதிர்த்துப் போராடுவேன்.''

தினந்தோறும் காலையில் முதல் காரியமாக மேற்கண்ட தீர்மானத்தைச் செய்து கொள்வோமாக.

★ 'கடவுள் ஒருவரே' என்று நான் நம்புகிறேன். அதனுல் மனிதசமூகம் முழுவதுமே ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன்.

அசோகா பாக்குத்தூள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
'' அசோகா பாக்டரி ''
தபால் பெட்டி நெ. 3702
11/234, டாக்டர் நஞ்ஜப்பா ரோடு
கோயமுத்தூர்-641018

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர், துணை ஆசிரியர் : கமலாத்மானந்தர்.
பதிப்பாளர் : சுவாமி தன்மயானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.
அச்சிடுபவர் : கே. எல். செல்லப்பன், சுத்தானந்த அச்சகம், சென்னை-600 020.